சுதேசமித்திரன்

வாரப்பதிப்பு

Vol. 13 No. 19 7-6-'42 Price 2 Annas

குழந்தைப்பருவத்தில்

முக்கியமான சுகத்தைத் தரும்

வுட்வார்ட் வைத்தியனின்

"கிரைப் வாட்டர்"

என்னும் மருந்துத் திராவகம்

குழந்தைக்கு

ஆரோக்யத்தைத் தரும்.

WOODWARD'S GRIPE WATER

W. WOODWARD LTD., LONDON, ENGLAND

வாரப் பதிப்பு சுதேசமித்திரன் 7-6-1942

சென்றவார. நிகழ்ச்சிகள்

மிஸ்டர் ரூஸ்வெல்டுக்குப் பகிரங்கக் கடிதம்

இந்தூர் மஹாராஜா பிரிட்டனுக்கும் இந்தியாவுக்கும் ஏற்பட்டுள்ள தகராறைத் தீர்க்க அமெரிக்கா தலையிட வேண்டுமென்றும் அது சீன சர்க்காருடனும் ஸோவியத் ரஷ்யாவுடனும் சேர்ந்து, ஒரு சமரஸம் செய்ய வேண்டுமென்றும் ஜனாதிபதி ரூஸ்வெல்டுக்கு ஒரு பகிரங்கக் கடிதம் எழுதியிருக்கிறார்.

இப்போதும் சரி. யுத்தத்துக்குப் பிறகும் சரி, இந்தியாவுக்கு உதவக்கூடிய நிலையில் அமெரிக்கா இருக்கிறது. இப்போது இந்தியாவின் ராணுவபலத்தைக் கவனிக்கவேண்டும். யுத்தத்திற்குப் பின் ராஜீயப் புனருத்தாரணத்தையும் கவனிக்க வேண்டும். சர்வதேச மத்தியஸ்தமுறையில்தான் இப்போது தகராறைத் தீர்த்து வைக்கவேண்டும். ஆகவே, அமெரிக்காவிலிருந்தும் சீனாவிலிருந்தும், ஸோவியத் ரஷ்யாவிலிருந்தும் தனித்தனி இரண்டு பிரதிநிதிகளை அனுப்ப வேண்டும். அவர்கள் இங்கு வந்து எல்லாப் பிரச்னைகளையும் அலசிப் பார்த்து ஒரு முடிவு கூற வேண்டும். அதன்படி பிரிட்டனும், இந்தியாவும் நடக்கவேண்டும். இதனால் பிரிட்டனின் பாரமும் குறையும். இந்த மத்தியஸ்தர்கள் என் சமஸ்தான சம்பந்தமாக விதிக்கும் கட்டளையை நான் ஏற்று நடக்கச் சித்தமாக இருக்கிறேன் அதன் பலன் என்னவானாலும் சரியே.

எனக்கு ஜனநாயகத்தில் நம்பிக்கையிருக்கிறது. ஜனநாயகத்துக்கும் யதேச்சாதிகாரத்துக்கும் ஒரு சமரஸமேற்படுவதென்பது நடவாத காரியம்.

“இந்தியாவைப்பற்றி இந்த சர்க்கார்கள். முதலில் தங்கள் கருத்தை வெளியிட வேண்டும். இதற்கு முதலில் அமெரிக்கா தான் வழி காட்ட வேண்டும். அமெரிக்காவுக்கு இந்தியா விஷயமாக நாடுபிடிக்கும் ஆசை கொள்ள இடமில்லை. சர்வதேச ஞானமுள்ள இந்தியர் எவரும் அவ்விதம் நினைக்கவேயில்லை. ஜனாதிபதி ரூஸ்வெல்ட் பேசிவிட்டால் இங்குள்ள தப்பபிப்பிராயங்கள் நீங்கும். அவநம்பிக்கையும் மறையும். வெற்றிக்காக இந்தியா மனப்பூர்வமான வழி தேடுவதற்கு அமெரிக்கா தக்க ஏற்பாடுகள் செய்து விடும் என அமெரிக்கா இப்போது. முன் வந்து சொல்ல வேண்டும். அதோடு சமரஸத்துக்குத் தங்களாலான எல்லா முயற்சிகளையும் செய்ய வேண்டும். தாங்கள் மட்டும் முன்வந்து முயன்றால் இந்திய மஹா ஜனங்கள் சுதந்திரத்துக்காக எதையும் தியாகம் செய்யச் சித்தமாக விருப்பார்கள்.”

* * * *

காரியாலயத்தில் போலீஸ் சோதனை

சென்ற மாதம் 26-ம்தேதி பகல் சுமார் 3 மணிக்கு அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டி காரியாலயமாகிய சுயராஜ்ய பவனத்தில் போலீஸார் புகுந்து அலகாபாத் ஜில்லா மாஜிஸ்டிரேட் பாதுகாப்புச் சட்டப்படி பிறப்பித்த வாரண்டைக் காட்டிச்சோதனை நடத்தினர். அந்தச் சமயத்தில் அங்கு ஆசார்ய கிருபலானி, அவரது மனைவியார், ஜனாப் சதிக் அலி, ஸ்ரீ கன்யாலால், ஸ்ரீ லால்பகதூர் சாஸ்திரி ஆகியவர்களிருந்தனர்.

சோதனைக்குப் பிற்கு டைப் அடிக்கும் யந்திரத்தையும் பிரதிகள் எடுக்கும் யந்திரத்தையும், அலகாபாத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களில் தடுக்கப்பட்ட தீர்மானங்களின் நகலையும், ஸ்ரீமதி சுசேத கிருபலானியின் சுற்றறிக்கைகள் சிலவற்றையும், அலகாபாத் கூட்ட நடவடிக்கைகளின் நகல். ஒன்றையும் ஸ்ரீ வினோபாபாவே, பண்டித ஜவஹர். ஆகியவர்களின் பழைய ‘ஸ்டேட்மெண்டு’களின் பிரதிகளையும் போலீஸார் எடுத்துச் சென்றனர்.

* * * *

ஐரோப்பியச் செய்திகள்

கலோன் மீது குண்டு வீச்சு

சென்ற 30-ம்தேதி இரவு ஆயிரத்திற்கதிகமான வெடிகுண்டெறியும் விமானங்களைக் கொண்ட கோஷ்டி ஒன்று ரூர் பிரதேசத்திலும் ரைன்லாந்திலுமுள்ள முக்கியமான இடங்களைத் தாக்கின.

கலோன் தான் முக்கியமாகத் தாக்கப்பட்டது. முழு விவரங்கள் கிடைக்கவில்லை. பூர்வாங்க ரிப்போர்ட்களிலிருந்து இத்தாக்குதல் மிக்க வெற்றிகரமாக இருந்ததாகத் தெரிகிறது. காலையில் ஹாலந்து கடற்கரையிலிருந்து புகையையும், தீயையும் பார்க்கமுடிந்தது. 15,000 அடி உயரத்திற்குமேல் புகை கவிந்து கொண்டிருப்பதாக அங்கு மறு நாள் அதிகாலையில் வேவு பார்க்கப் போன விமானங்கள் வெளியிட்டன. இதர விமானங்கள் எதிரியின் விமானக்கூடங்களைத் தாக்கின.

* * * *

ஜப்பான் பயமுறுத்தல்

“ஆஸ்திரேலியா தனது போக்கைப்பற்றிப் புனராலோசனை செய்து ஆசிய க்ஷேமாபிவிருத்தி திட்டத்தில் பங்கெடுத்துக் கொள்ள வேண்டும்.” என்று ஜப்பானியப் பிரதம மந்திரியான ஜெனரல் டோஜோ ஜப்பான் பார்லிமெண்ட் கூட்டத்தில் மற்றொரு முறை ஆஸ்திரேலியாவுக்கு எச்சரிக்கை செய்தார்.

ஜெனரல் டோஜோ மேற்கண்டவாறு எச்சரித்ததுடன் “ஜப்பானின் தற்காப்பு முஸ்தீப்பு கற்பாறைபோல் அவ்வளவு உறுதி வாய்ந்ததாகும்” என்றும் கூறினார்.

“யுனைடெட் ஸ்டேட்ஸ்மீதும், பிரிட்டன் மீதும் நாம் தொடுத்துள்ள யுத்தத்தை இனிமேல் தான் நடத்தியாக வேண்டும்” எனவும் ஜெனரல் டோஜோ வற்புறுத்தினார்.

கிழக்கு ஆசியாவில் யுத்தம் துவங்கியது முதல் இதுவரை

யுத்த மந்திரி மனைவி

★

ஸர் ஜேமஸ் கிரிக் யுத்த மந்திரி பதவியேற்றதால் அவரது மனைவி வகித்து வந்த பதவி போய்விட்டது. இதற்கு முன்பு சுமார் ஒரு வருஷ காலத்திற்கதிகமாகவே லேடி கிரிக் யுத்த மந்திரியின் அந்தரங்க காரியதரிசி வேலை பார்த்து வந்தார். இதற்கு அவர் சம்பளம் வாங்கவில்லை. கணவர் பதவி யேற்றதும் இம்மாதிரி சேவை செய்யமுடியாதென்பதை இருவரும் ஒப்புக்கொண்டுவிட்டனர்.

ஜப்பான்-ரஷ்ய உறவில் மாறுதலில்லையென அந்நிய நாட்டு மந்திரியான அட்மிரல் டோகோ தெரிவித்தார்.

* * * *

வாஷிங்டனை ஜப்பான் தாக்கக்கூடும்

சென்ற மாதம் 28-ந்தேதி நடந்த பத்திரிகாநிருபர்கள் கூட்டத்தில் யுத்த மந்திரியான மிஸ்டர் ஸ்டிம்ஸன் பின்வருமாறு தெரிவித்தார்:— ஜெனரல் டூலிட்டிலின் விமானக் கோஷ்டி ஜப்பானைத் தாக்கியதால். ஜப்பானுக்கு அவமானமேற்பட்டிருக்கிறது. இதனால் பழி வாங்குவதற்காக அது அமெரிக்காவைத் தாக்குவது நிச்சயமாகும். யுனைடெட் ஸ்டேட்ஸின் கிழக்குக் கரை ஜப்பானுக்கு வெகு தூரத்திலிருந்தபோதிலும் வாஷிங்டனை ஜப்பானியர் தாக்கக்கூடும். வாஷிங்டன் தாக்கப்படமாட்டாதென்று நினைப்பது சாத்தியமில்லை. ஜப்பானின் கூட்டாளிகள் தாக்கக்கூடியதுபற்றி நான் விவாதிக்கவில்லை. மேற்குக் கரையில் ஜப்பானியர் தாக்குவர் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்தத் தாக்குதலைச் சமாளிப்பதற்காக ராணுவம் தன்னால் சாத்தியமானதை எல்லாம் செய்து வருகிறது. எது நிகழ்ந்தாலும் நமது பாதுகாப்பு ஏற்பாடுகளை நாம் தளர்த்தமாட்டோம். நாம் பெரிய தாக்குதலுக்காக நமது முஸ்தீப்புகளைச் செய்கிறோம், இந்த முயற்சியைத் தளர்த்தமாட்டோம்” என்றார் மிஸ்டர் ஸ்டிம்ஸன்

* * * *

ஈக்விடாரில் புரட்சி

சென்ற. 27-ம்தேதி இரவு சொற்ப நேரம் ஈக்வடாரில் புரட்சி நடந்தது; சர்வ கலாசாலைக்கருகிலுள்ள கவர்ன்மெண்ட் அரண்மனைக்குள் நுழைய ஆர்ப்பாட்டம் செய்ய புரட்சிக்காரர்கள் முயன்றார்கள். ஒரு பீரங்கிப் போர் நடந்ததில் ஒரு துப்பாக்கி வீரர் இறந்தார். மற்றும் 2 பேர் காயப்பட்டனர். இறந்தும் காயப்பட்டும் போன ஸிவிலியன்களது தொகை தெரியவில்லை. ஒரு மணிக்குப் பிறகு சர்க்கார் நிலைமையை சமாளித்து கலகத்தை அடக்கிவிட்டனர். கலகத் தலைவராக இருந்த காப்டன் லியோனிதாஸ் பிளாஸா ஒரு கூட்டத்தில் கைது செய்யப்பட்டார். இவர் அக்கூட்டத்தில் ராணுவ ஆபீஸர்களை கலகஞ் செய்யும்படி தூண்ட முயற்சித்தார். இம்முயற்சி வீணாயிற்று.

* * * *

மடகாஸ்கர் பாதுகாப்பு

மடகாஸ்கரில் பிரிட்டிஷ் படைகளுடன் கூட, தென்னாப்பிரிக்கப் படைகளும் வேலை செய்கின்றன, தென்னாப்ரிக்கப் பாதுகாப்புக்கு மடகாஸ்கர் முக்கியமானதென்று பீல்ட்மார்ஷல் ஸ்மட்ஸ் அறிவித்தார். ஜப்பானிய ஆபத்து நெருங்கினால் மடகாஸ்கருக்கு மேலும் தென்னாப்பிரிக்கத் துருப்புகள் அனுப்பப்படுமென்றும் மிஸ்டர் ஸ்மட்ஸ் கூறினார் தென்னாப்பிரிக்க விமானப் படையொன்றும் மடகாஸ்கரிலிருப்பதாகத் தெரிகிறது.

* * * *

மகாத்மா விளக்கம்



ஸ்ரீமான் ஸி. ராஜகோபாலாச்சாரியார் திருநெல்வேலியில் ஒரு பெரிய பொதுக்கூட்டத்தில் தமது கக்ஷியை விஸ்தரித்துப் பேசினார்.

ராஜாஜி பிரசாரத்தைப் பற்றி மகாத்மா ‘ஹரிஜன்’ பத்திரிகையில் அடியிற்கண்ட வியாசத்தை எழுதியிருக்கிறார்.

“ராஜாஜி தற்போது அநுஷ்டித்து வரும் ஒரு கொள்கையால் அவரது சகாக்களிடமிருந்து அவர் பிரிந்து நிற்கிறார் என்பதில் சந்தேகமில்லை. ஆனால், அவருக்குச் சுயநல உணர்ச்சி இருப்பதாக அவரது பெரும் விரோதியும் சொல்லத் துணியமாட்டான். அவர் தமது கொள்கையை இப்போது விசேஷ ஊக்கத்துடன் எங்கும் பரப்ப முயன்று வருகிறார். மனத்தில் தன்னல எண்ணமின்றி அவர் செய்து வரும் இந்த முயற்சியைக் கவனிக்கையில் அவரது அரிய குணம் தான் வெளிப்படுகிறது. அவரது நோக்கமென்னவோ உயர்ந்தது தான் ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமைக்கு உழைப்பது சிறந்த காரியம்: அதோடு ஜப்பானியப் படையெடுப்பைத் தவிர்க்க முயலுவது இன்னும் சிறந்த விஷயம். அவர் இரண்டு காரியங்களும் ஒன்றோடொன்று பிணைந்திருப்பதாக எண்ணுகிறார். மரியாதையாக அவர் சொல்வதையும் கேட்க வேண்டியது அவசியம்.

“குழப்பம் பண்ணக்கூடாது”

அவர் கூறும் நியாயங்களை எதிர்ப்பதென்றால், அதற்குக் காலாடித் தனம் ஒரு வழியாகாது. அவர் பேசும் கூட்டங்களில் குழப்பம் விளைப்பதைக் கண்டால், நம்மவருக்குச் சகிப்புத் தன்மை ஏற்பட வில்லையென்றே தெரிகிறது. எதிர்க் கட்சியினர் சொல்வதையும் கேட்க நாம் மனம் கொள்ளாவிட்டால், ஜனநாயக உணர்ச்சியே வலுககாது. நாம் நமது எதிரிகளின் கருத்தைக் கேட்க மறுத்தாலும் சரி; கேட்டபின் அவற்றைப் பரிகசித்தாலும் சரி. நியாயத்துக்கு நாம் எதிராகவிருப்பதாகத் தான் அர்த்தம். சகிக்கும் வழக்கம் நமக்கு இல்லாதொழிந்தால், சத்தியம் இன்னதென நமக்குத் தெரியாது போய்விடலாம். தக்கது இன்னது தகாதது இன்னது என்று உய்த்து உணரும் உணர்ச்சியை நமக்கு இறைவன் அளித்திருக்கையில் நாம் நமக்குத் தகுதியானதென எது தோன்றுகிறதோ அதையே அச்சமின்றி அனுஷ்டிக்கவேண்டும். நாம் எப்போதும் பிறர் வார்த்தைகளைக் கேட்கத் தயாராகவிருக்க வேண்டும். தவறிருந்தாலும் சரி, நமது வழி தகாததாகவிருந்தாலும் சரி, எப்போதும் நாம் திருத்திக்கொள்ள சித்தமாகவிருக்க வேண்டும். இவ்விதம் நடந்து கொண்டால், நமக்கு மனவலிமை ஏற்படுவதோடு சத்தியமும் பலப்படுகிறது. ஆகவே, ராஜாஜியின் கூட்டத்தில் குழப்பம் விளைப்பவர்களை நான் அவ்விதம் செய்ய வேண்டாமெனக் கேட்டுக் கொள்ளுகிறேன். அவர் கூறுவதை மரியாதையுடனும் அமைதியாகவும் கேட்க வேண்டும். அவ்விதம் நாம் அவரை நடத்துவதற்கு அவர் பாத்திரமானவர்.

என் கருத்து

ராஜாஜி தவறாக நடக்கிறார் என நான் நினைக்கிறேன். இதை வாசகர்கள் நன்கறிந்திருக்கிறார்கள். அவர் உண்மையில்லாத ஒரு நிலையை உற்பத்தி செய்து வருகிறார். பாகிஸ்தானில் அவருக்கு நம்பிக்கையில்லை. மற்ற தேசீய முஸ்லிம்களுக்கும் நம்பிக்கையில்லை. பிரிந்து நிற்கும் கொள்கையை அங்கீகரிப்பவரும் அந்த உரிமையைப் பிறருககும் அளிக்க எண்ணுபவர்களும்கூட, அந்த பாகிஸ்தானை ஆதரிக்கவில்லை. அவர்களும் ராஜாஜியும் இப்போது தாங்கள் செய்யும் முயற்சியால் பிரிவினைக் கோரிக்கையை முஸ்லிம் லீக் வற்புறுத்தாமலிருக்கச் செய்து விடலாம் எனச் சொல்லுகிறார்கள். நிச்சயமற்ற தன்மையை உடைய இவ்வித வசதியைக் கண்டு பல முஸ்லிம்கள் சந்தோஷமடைவதைக்காண எனக்கு ஆச்சரிய மேற்படுகிறது. இதில் வேற்றுமைக்கு வித்திருப்பதாகவே நான் எண்ணுகிறேன். இன்னும் சச்சரவுக்குத் தான் இது வழியாகவிருக்கும். முஸ்லிம்கள் உண்மையில் ஒரு விஷயத்தை விரும்பினால் அதைப் பெறவொட்டாமல் லீகைத் தடுக்க ஒருவராலும் முடியாது என்று சொல்லிவிட்டால் போதும். அவர்கள் மத்யஸ்த முறைக்கு இணங்கி வராவிட்டால், அவர்கள் ஓட்டு மூலமோ அன்றிப் பலாத்காரத்தாலோ விரும்பியதை அடையட்டும்.

செய்ய வேண்டியது

ஆனால் இதெல்லாம் எப்போது நடக்கவேண்டும்? பிரிட்டிஷ் ஆதிக்கம் முதலில் அடியோடு நீங்க வேண்டும்: ஜப்பானியர் தொல்லை மறையவேண்டும். அதற்கு முன் பாகிஸ்தானோ, ஹிந்துஸ்தானோ வேறு ஸ்தான்களோ, எதனாலும் பயனில்லை. இப்போதுள்ள நிலையில் இன்று இங்கிலீஷ்ஸ்தானாக விருப்பது நாம் சிரத்தை காட்டாவிட்டால் நாளை ஜப்பானிஸ்தானாகலாம்: ஆகவே இந்தியாவைத் தாங்கள் சொந்த நாடாகக் கருதுபவர்கள், ஒன்றுபட்டு முயன்று அடுத்து வரும் ஆபத்தினின்றும் நாட்டைக் காப்பாற்ற வேண்டும். மேற்சொன்ன இரண்டும் முடிவாக நீங்கினால், பாகிஸ்தானைப்பற்றியும் மற்ற ஸ்தான்களைப்பற்றியும் பேசலாம். சமரஸமாக ஒரு முடிவுக்கு வரலாம். இல்லையானால் சண்டையும் போடலாம்: மூன்றாவது மனிதர் குறுக்கிட்டு நமது கதிமோக்ஷத்தை நிர்ணயிக்கக் கூடாது. நியாயப்படியாவது நடக்க வேண்டும்: அல்லது வல்லான் வகுத்ததே வாய்க்காலாக இருக்க வேண்டும். தேசாபிமானத்துடனும் விடாமுயற்சியுடனும் ராஜாஜி அநுஷ்டித்து வரும் முயற்சி அவருக்கும் தெரியாத, நமக்கும் தெரியாத ஒரு நல்ல வழியைக் காட்டவேண்டும். இல்லாவிட்டால் ராஜாஜி முயற்சி குருட்டு வழியில் தான் கொண்டு போய் விடும். கருத்து வேறுபாடுகளின் கதி என்னவாயினும், பரஸ்பரம் சகிப்புத் தன்மையும் மரியாதையும் வேண்டுமென்றே நான் சொல்லுகிறேன்.

கின்வா காலியாகியது

தரையிலிருந்தும் விமானங்களிலிருந்தும் அகோரமான குண்டுப் பிரயோகங்களை பல நாள் எதிர்த்து நின்ற பிறகு சீனப் படை செகியாங் மாகாணத்தின் தலை நகரான கின்வாவைக் காலி செய்து விட்டதென்று சங்கிங்கில் உத்தியோக முறையில் அறிவிக்கப்படுகிறது,

* * * *

ஹிட்லர் உபதேசம்

மேல் பதவிக்கு உயர்த்தப்பட்ட ஜெர்மன் அதிகாரிகள் முன் ஹிட்லர் சில வார்த்தைகள் பேசினார்.

ரஷ்யப் போர்முனையில் குளிர் காலத்தில் நடந்த யுத்தத்தைப் பற்றி அவர் குறிப்பிடுகையில் தெரிவித்ததாவது:—

கிடைத்த வெற்றிகளைக் கொண்டாடுவதற்கு வேண்டிய திறமையைவிட, உறுதியுடன் போராடிச் சங்கடமான நிலைமையைச் சமாளிக்க அதிகத் திறமை வேண்டும். நமது ஜனங்களின் எதிர்கால கதி முழுதும், போர்முனையில் நீங்கள் காட்டும் தீரத்தையே பொறுத்திருக்கிறது.

நீங்கள் எந்த இடத்திலிருந்து கொண்டு போராடினாலும், ஜெர்மனியின் க்ஷேமம் உங்கள் கையிலிருக்கிறதென்பது உங்களுக்கு ஞாபகமிருக்க வேண்டும். ஜெர்மன் ஸோல்ஜர்கள் தாங்கள் செய்ய வேண்டிய உயரிய கடமைக்கு எதை மூல மந்திரமாகக் கொள்ள வேண்டுமென்பது. ஜெர்மன் சரித்திரத்தில் காணக் கிடக்கிறது.

ஜான் பாரிமூர் மரணம்

ஜான் பாரிமூர் என்ற பிரபல நடிகர் வயிற்றுப் புண்களின் காரணமாகவும் பித்தப்பை சரியாக வேலை செய்யாதது காரணமாகவும் மே மாதம் 30-ந் தேதி இறந்து போனார். இவரது சகோதரரான லைனல் பாரிமூர் இவர் இறக்கும் தருவாயில் இவர் அருகில் இருந்தார்.

முஸ்லிம் கோரிக்கை

ஸர் எவலின் ரென்ச்
எழுதியது

இந்தியப் பிரச்னை

இந்தியப் பிரச்னையை சரிவர அறிந்து கொள்வது அவ்வளவு சுலபமான காரியமல்ல. இந்தியாவுக்குப் போய், விஷயங்கள் பூராவையும் நன்காராய்ந்து ஒரு முடிவுக்கு வர விரும்புபவர்களுக்கு ஆரம்பத்தில் சிக்கலான நிலைமை தான் புலப்படும். அக்கம்பக்கத்திலும், ரஸ்தாவின் எதிர்வாடையிலும், அடுத்த ஊர்களிலும் இருக்கும் வீடுகளில் போய் விசாரித்தால் ஒவ்வொருவரும் பிரச்னையைத் தீர்க்க புது மாதிரியான வழியையே காட்டுவார். இந்தியாவில் சுற்றித் திரிந்தவர் மிஸ்டர் காந்தியையும் மிஸ்டர் ஜின்னுவையும் பேட்டியிடாவிட்டால் பிரயோஜனம் இல்லை. நான் சமீபத்தில் இந்தியாவுக்குச் சென்றிருந்தபோது அவ்விருவருடனும் விஷயத்தை விவாதித்தேன்.

மிஸ்டர் ஜின்னுவுடன் பேச்சு

இப்போது முஸ்லிம்களது நோக்கம் என்னவென்பதை விவரிப்பேன். இதற்கடுத்த வியாசத்தில் மஹாத்மாஜிக்கும் எனக்கும் நடந்த சம்பாஷணையின் விவரத்தை வெளியிடுவேன். அகில இந்திய முஸ்லிம் லீக் தலைவரான மிஸ்டர் எம். ஏ. ஜின்னுவுடன் சுமார் ஒன்றரை மணி நேரம் புது டில்லியில் சம்பாஷித்தேன்: அப்போது தான் அவர் இன்ப்ளுவென்ஸா ஜுரத்திற்குப் பின் சற்று சொஸ்தமடைந்து வந்தார். "முஸ்லிம் இந்தியா பாகிஸ்தான் வேண்டும் எனக் கோருவதன் காரணத்தை எனக்குச் சுட்டிக்காட்டப்போவதாக" மிஸ்டர் ஜின்னு தெரிவித்தார். எங்கள் இருவருக்கும் நடந்த பேச்சு வார்த்தைகள் பூராவும் குறித்து வைக்கப்பட்டன என்றே நான் எண்ணியிருந்தேன்: ஆனால் மிஸ்டர் ஜின்னு சம்பாஷணைக்கப்புறம் என் உள்ளத்தில் உதித்த கருத்தை மட்டுமே வெளியிட்டால்போதும் என்று தெரிவித்து விட்டார். பிறகு இதர முஸ்லிம் தலைவர்களுடனும் நான் தற்கால முஸ்லிம் நிலையைப்பற்றிப் பிரஸ்தாபித்தேன். ஆகவே இந்த வியாசத்தில் முஸ்லிம்களது நோக்கம் என்னவென்று தெரிவிக்கப்போகிறேன். முஸ்லிம் லீக் திட்டத்தை ஆதரிக்காத முஸ்லிம்கள் அநேகர் இருக்கின்றனர். ஆயினும், அந்த ஸ்தாபனம் பெரும்பான்மையினர் ஆதரவைப்பெற்றிருக்கிறது என்பதை நான் கண்டு கொண்டேன்.

லீக் தீர்மானம்

இந்தியாவில் வந்து சிலருடன் நான் பேச வாரம்பித்தவுடனேயே பாகிஸ்தான் என்பது என்ன, அது எதற்காக என்பதெல்லாம் என்னிடம் விவரமாகக் கூறப்பட்டன; சுய ஆட்சியை முஸ்லிம்கள் எவ்வளவு தீவிரமாகக் கோருகிறார்கள் என்பதை அப்போது தான் நான் உணர்ந்தேன். இந்தியப் பிரச்னையைத் தீர்த்து வைக்க முற்படுபவர், ஒரு மைனாரிட்டி எப்போது மைனாரிட்டியாக இருப்பதில்லை என்ற கேள்விக்கு முதன் முதலில் பதில் அளிக்க வேண்டியதாகிறது. சிறந்த கலா ஞானம் படைத்த ஒரு கோடி மக்களை தாழ்ந்தவர்களாகக் கருதி வருவது நியாயமா? இந்தியாவில் இருக்கும் முஸ்லிம்களில் பெரும்பான்மையோரின் பிரதிநிதியென்று தங்களைக் கூறிக் கொள்ளும் சிலரைக் கண்டு பேசியபோதும், 1935-ம் வருஷத்தில் இந்தியா கவர்ன்மெண்ட் சட்டத்தில் குறிப்பிடப்பட்ட சமஷ்டித் திட்டம் இனி ஆதரிக்கப்படவில்லை என்பதை அறிந்தேன். 1940-ம் வருஷம் மார்ச்சு மாதம் அந்தச் சட்டம் "முஸ்லிம் இந்தியா ஒப்புக்கொள்ளத் தகாதது" என்று லீக் தீர்மானித்தது: "அரசியல் திட்டம் பூராவும் திரும்பவும் பரிசீலிக்கப்பட்டால்தான் முஸ்லிம் இந்தியாவுக்குத் திருப்தி யேற்படும்" என்றும் "முஸ்லிம்களுடைய சம்மதமும் ஆதரவும் இன்றி தயாரிக்கப்படும் எந்தத் திருத்தத் திட்டமும் அவர்களால் ஒப்புக் கொள்ளப்படமாட்டாது" என்றும் அதே சமயம் வற்புறுத்தப்பட்டன.

கோரப்படும் திட்டம்

இந்தக் கடைசி நிபந்தனை நிராகரிப்பு உரிமையைச் சுட்டிக் காட்டுகிறது. இந்தியாவை ஐந்து பகுதிகளாகப் பிரித்து ஐந்து பூரண சுதந்திரம் பெற்ற சமஸ்தானங்களாக அவற்றை நிறுவும் திட்டம் அவர்களிடை அதிக ஆதரவு அடைந்திருப்பதாகத் தோன்றுகிறது: ஏறக்குறையக் கவனித்தால், வடக்குப் புறமான இரு பகுதிகளில் வடமேற்கு இந்தியா அடங்கிவிடும்: இங்கு முஸ்லிம்கள் 70-சதவிகிதமுள்ளனர். மற்றொரு பகுதி வடகிழக்கில் இருப்பது: இதில் வங்காளமும் அஸ்ஸாமும் சேர்ந்திருக்கும்; இங்கு சுமார் 55-அல்லது 60-சத விகிதம் முஸ்லிம்கள் தொகை. முஸ்லிம்களது ஆதிக்கத்திலிருக்கும் இவ்விரு ராஜ்யங்களும், இந்திய ஜனத் தொகையில் ஐந்தில் ஒரு பங்கு மீதும், நான்கில் ஒரு பங்கு மீதும் முறையே அதிகாரத்தை செலுத்தும்: பார்க்கப்போனால் அவை விஸ்தரிக்கப்பட்ட இந்திய சமஸ்தானங்கள் போலத்தான் இருக்கும்: தங்களது விஷயங்களைத் தாங்களாகவே கவனித்துக்கொள்ளும்: வெளிநாட்டு விவகாரமும் பாதுகாப்பும் மட்டும் அவைகளிடம் வராது: அவை மன்னரின் பிரதிநிதி என்ற முறையில் ராஜப்பிரதிநிதியால் கவனிக்கப்படும்: அதற்காக ஒரு மத்திய சபை அமைக்கப்படும். மிகுந்த மூன்று பகுதிகளில் இந்தியாவின் இதர பிரதேசங்கள் அடங்கி நிற்கும்: இதில் ஹிந்துக்கள் பெரும்பான்மையினராயிருப்பர்: அவர்களது தொகை 25 கோடி: அதாவது யுனைட்டட் ஸ்டேட்ஸில் இருப்பதைவிட இரட்டிப்பு அதிகம். இந்த மூன்று பகுதிகளிலேயே சீனாவைத் தவிர, உலகத்தின் வேறு பாகத்தில் இராத வளவுக்கு ஹிந்துக்களின் ஜனத் தொகை இருக்கும் என்கின்றனர் முஸ்லிம்கள்: ஆகவே அவர்கள் இதைக்கொண்டு சந்துஷ்டியுடனிருக்க வேண்டும் எனவும் முஸ்லிம்கள் விரும்புகின்றனர்.

காட்டப்பட்ட உதாரணம்

இந்திய சமஸ்தானாதிபதிகளுக்கும் மன்னருக்கும் இருந்துவரும் உறவு, தற்போது போலவே, உடன்படிக்கை மூலம் கட்டுப்பட்டதாகவே இருக்க வேண்டும் என்பதும் முஸ்லிம்களது கருத்து: தற்சமயம் இருப்பதுபோலவே, 7 கோடி மக்கள் கொண்ட இந்த சுதேச சமஸ்தானங்கள் பிரிட்டிஷ் இந்தியாவில் சேராமல் இருக்கும்: ஆனால் பிரிவினையாக்கப்பட்ட இந்த ஐந்து பகுதிகளுடன் அவை ஒத்துழைக்கும். பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தில் குடியேற்ற நாட்டந்தஸ்து முறை வளர்ந்து விருத்தியடைந்த விதத்தைப்பற்றி முஸ்லிம்கள் அதிகம் படித்தறிந்திருப்பதாக எனக்கு அவர்களுடன் நடந்த பேச்சுகள் மூலம் புலப்பட்டது. கனடாவின் அரசியல் முற்போக்கு பன்முறை என்னிடம் பிரஸ்தாபிக்கப்பட்டது: பிரிட்டிஷ் வட அமெரிக்கச் சட்டம் பிறப்பிக்கப்பட்டபோது, மேல் கனடாவுக்கும் கீழ் கனடாவுக்கும் - அதாவது தற்போது அண்டோரியோ க்விபெக் என்றழைக்கப்படும் பகுதிகளுக்கிடை—இருந்து வந்த வித்தியாசங்களும் அவை இரண்டும் தனித் தனிச்சட்டங்களும் ஸ்தாபனங்களும் கொண்டிருந்த போதிலும், அந்நியோன்யமாக இருந்து வருவதும் உதாரணமாகக் குறிப்பிடப்பட்டன.

சில தலைவர்கள் கூறியவை

இந்தியாவில் ஒற்றுமையிராததைப்பற்றி மிஸ்டர் ஜின்னு பகிரங்கமாகக் கூறுகிறார். ஒற்றுமை எனப்படும் வஸ்துவே கிடையாதென்றும், இந்தியா பல தேசங்கள் சேர்ந்தது என்றும், ஹிந்துக்களும் முஸ்லீம்களும் தான் இரண்டு பெரிய தேசத்தார் என்றும் அவர் சொல்லுகிறார். ஒரு பிரபல முஸ்லீம் தலைவர் பின் கண்டபடி என்னிடம் சொன்னார். "இந்தியா பூராவையும் ஒரு குடியேற்ற நாடாகச்செய்வது, சாத்தியமற்ற காரியத்தை நிறைவேற்றத் துணிவதற்கொப்பாகும். ஹிந்துக்களிடம் எங்களுக்கு விரோதம் கிடையாது. ஆனால் எங்கள் இருவருக்கும் அடிப்படையான விஷயங்களில் அபிப்பிராய பேதம் நிலவிவருகிறது. எங்கள் வாழ்க்கை முறை, எங்கள் சட்டம் இவையாவும் வேறுபட்டவை. ஹிந்துக்களும் முஸ்லிம்களுக்குமிடை இருக்கும் உறவைக் கவனித்தால் உங்களுக்கும் ஜெர்மனிக்கும் அதிக உறவு இருக்கிறது எனக் கூறலாம்?" மற்றொரு முஸ்லீம் தலைவர் இவ்விதம் பேசினார். "எங்கள் மதம் சகோதரபாவத்தைப் பிரதானமாக கொண்டது. எங்களுக்கு ஹிந்துக்களிடையே காணப்படும் ஜாதி முறை புரிவதில்லை. வெள்ளிக்கிழமையன்று நான் மசூதிக்கு போனதும் எனது மோட்டார் ஓட்டி என் பக்கத்தில் இருந்து கடவுளை மண்டியிட்டு பிரார்த்திக்கிறான். தொழுகை முடிந்ததும் நாங்கள் இருவரும் சகோதர பாவத்துடன் ஒருவரையொருவர் கட்டியணைத்துக் கொள்கிறோம்." மன்னர் தமது அதிகாரத்தை ஒரு மத்திய இந்திய மந்திரி சபையிடம் மாற்றிக்கொடுத்தால், உள் நாட்டுச் சண்டை ஏற்படுவது நிச்சயம் என்று சில முஸ்லிம்கள் எண்ணுகின்றனர். சமீபத்தில் "நியூஸ் க்ரானிகள்" பத்திரிகை நிருபருக்கு அளித்த பேட்டியில் மிஸ்டர் ஜின்னு, யுத்த நிலைமை காரணமாக ஹிந்துக்களின்—அதாவது பிரதானமாக காங்கிரஸ்காரர்—தலைவர்களுடைய விருப்பப்படி ஒரு புதிய அறிக்கையை வெளியிடுமாறு பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் நிர்ப்பந்திக்கப்பட்டால் அபாயம் ஏற்படலாம் என்றார்.

"வலுத்த கூட்டாளி"

பாகிஸ்தான் தங்களது மதக்கோட்பாடுகளில் பிரதானமானது என்று சில முஸ்லிம் தலைவர்கள் தெரிவிக்கின்றனர். இப்போது உத்தேசிக்கப்பட்ட முஸ்லிம் பகுதிகள் ஆப்கானிஸ்தானம், இரான், இராக், எகிப்து முதலிய நாடுகளுடன் சேரக் கூடும் என்று சில பத்திரிகைகளில் வெளியாகியிருப்பதை நான் படித்திருக்கிறேன். என்னுடன் பேசிய முஸ்லிம் தலைவர்கள் ஒருவராவது இதைப்பற்றிப் பிரஸ்தாபிக்கவேயில்லை. முஸ்லிம் இந்தியாவுக்கும் மத்திய கீழ்த்திசையில் உள்ள முஸ்லிம் ராஜாங்கங்களுக்கும் அந்நியோந்நியமும் சிநேகமும் இருக்கும் என்பதை அவர்களே ஒப்புக்கொள்கின்றனர். ஆனால் தங்களது சுய ஆட்சிக்கோரிக்கை

—(12-ம் பக்கம் பார்க்க.)

ஜெர்மன் வேவு நடைமுறை

★ 'நியாயவாதி' ★

ஜெர்மன் வேவு இலாகா முதல்தரமானது என்று எல்லோராலும் ஒப்புக் கொள்ளப்படுகிறது. அதன் திறமைக்குக் காரணம் என்ன? புதிய முறைகளை அது அனுஷ்டிப்பதுடன் அவற்றை கையாளுபவர்களுக்கு நல்ல பயிற்சியை அளிக்கிறது. அது கவனிக்காத விஷயம் ஒன்றுமில்லை. அதன் பார்வைக்குள் அகப்படாதது யாதுமில்லை: அதற்குப் புலப்படாத மர்மமும் இல்லை.

நாஜிகளது எழுச்சிக்குப் பின் வேவு இலாகாவின் முக்கியத்துவம் முதன்மை ஸ்தானம் பெற்று விட்டது எனலாம். ஹிட்லர் வேவு இலாகாவும் ரகசிய போலீசும் ராஜாங்கத்தின் உயிர் நாடி என்று கருதுகிறார். சத்ருக்கள் யாராகிலும் சரி அவர்களை ஒழித்து விடுவதே சர்வாதிகாரிகளின் முதல் கவலை. நாட்டில் தனக்கு விரோதமாய் கிளம்பக் கூடிய சதிகாரர்களையும் கலகக்காரர்களையும் அவர்களைக் கண்டுபிடித்து அவர்களுக்குக் கடுமையான சிக்ஷையளிக்க அவர் ஆத்திரமும் அக்கரையும் கொள்கிறார்: அன்னிய நாடுகளில் நடைபெறும் வியவகாரங்களை அறிய அவர் கண்ணும் கருத்துமாயிருக்கிறார். தனக்கு சத்ருவாய் ஏற்படக் கூடிய வல்லரசுகளின் ராணுவ முஸ்தீப்புகளையும் அவற்றின் படைகளின் பலாபலங்களையும் பற்றிய முழு விவரங்களை தெரிந்து கொள்வதில் அவர் காட்டும் ஆர்வத்துக்கு ஒரு எல்லையில்லை. ஆதலால் அவருக்கு ஒரு முதல்தரமான சக்திவாய்ந்த வேவு ஸ்தாபனம் எவ்வளவு அவசியம் என்பதை எடுத்துக் கூறுவது மிகையேயாகும்.

நாஜி சித்தாந்தம்

நாஜிகளின் கொள்கைப்படி ஒரு ஜெர்மனியன் எங்கே இருப்பினும் சரி. அவன் தனது நாட்டுக்காக தனது உடல் பொருள் ஆவி அனைத்தும் அர்ப்பணம் செய்ய வேண்டியவனே. அவன் வேறு நாட்டில்குடியேறி அந்நாட்டின் பிரஜையாயிருப்பினும் இக்கடமை அவனைவிடாது. ஒரு ஜெர்மன் ஜாதியான் இங்கிலாந்திலோ, பிரான்ஸிலோ குடிமகனாய் அந்நாட்டின் பிரஜா உரிமையைப் பெற்ற பொழுதிலும் அவன் ஜெர்மன் சர்க்காரின் அதிகாரத்துக்குட்பட்டவனே என்பது நாஜி சித்தாந்தம். ஹிட்லர் சகாப்தம் ஜெர்மனியின் ஆரம்பமான பிறகு இது எங்கும் போதிக்கப்பட்டது.

அன்னிய நாடுகளைப்பற்றிய விவரம் ஏதேனும் ஒரு ஜெர்மனியனுக்கு எட்டினால் அதை அவன் தனது ராஜாங்கத்தின் வேவு இலாகாவுக்கு அறிவிக்க வேண்டும். ஒரு அற்ப விஷயமாயினும் அது பின்னர் உபயோகமுள்ளதாய் இருக்கலாம். ஆதலின் எதையும் அலக்ஷியம் செய்யக்கூடாதுஎன்பது ஜெர்மன் பிரஜைக்கு கற்பிக்கப்படுகிறது.

இப்படி பலதரப்பட்டவர்களால் கொண்டு வரப்படும் பல தரப்பட்ட விவரங்களை அரசாங்கத்து இலாகா ஒழுங்கு படுத்தி வைக்கிறது. அவற்றிலிருந்து வேறு விஷயங்களையும் கண்டு பிடிப்பதில் சிரத்தை கொள்ளுகிறது. அவசியமாயின் மேற் கொண்டு வேவு பார்க்கவும் துப்பு விசாரிக்கவும் ஒற்றர்களை அனுப்புகிறது.

உதாரணக் கதை

ஜெர்மன் வேவு இலாகா எப்படி வேலை செய்கிறது என்பதை விளக்குவதற்கு கீழே குறிப்பிடப்படும் கதை ஒரு உதாரணமாகும். அதில் கூறப்படும் சம்பவங்கள் யுத்தம் ஆரம்பமாவதற்குசில மாதங்களுக்கு முன் நடைபெற்றன.

ஒரு ஆங்கில யுவன் தனது ஐரோப்பியப் பிரயாணத்தின் பொழுது சில தினங்கள் ஜெர்மனியில் கழிக்கும்படி நேரிட்டது. தனக்குப் பரிசயமான ஜெர்மன் குடும்பத்தின் அதிதியாக அவன் இருந்தான். உல்லாஸமாய் உண்பதும் ஊரைச் சுற்றுவதுமே அவன் பொழுது போக்கு. அவனைப் போன்றவர்கள் எத்தனையோ பேர்கள் கூறும் விவரங்களிலிருந்தே பல உபயோகமான தகவல்களை ஜெர்மன் ராஜாங்கம் சேகரித்திருக்கிறது என்பது குறிப்பிடதக்கது.

ஒரு நாள் அவன் தனது ஜெர்மன் நண்பர்களுடன் சம்பாஷித்துக் கொண்டிருக்கையில் சர்வதேச நிலைமையும் யுத்தம் எழக்கூடிய சாத்தியத்தையும் பற்றி பிரஸ்தாபம் வந்தது. அப்பொழுது அங்கிருந்த ஜெர்மானியர்களில் ஒருவன் "இங்கிலாந்துக்கும் ஜெர்மனிக்கும் யுத்தம் நடை பெறாது என்பது என் நம்பிக்கை, எக்காரணத்தைக் கொண்டும் இங்கிலாந்து ஜெர்மனி மீது போர் தொடுக்காது. ஏனெனில் பல மாதங்களாகவே ஜெர்மனி யுத்த சன்னத்தமாக இருக்கிறது. நாளுக்கு நாள் அது தனது ராணுவ பலத்தை விருத்தி செய்து கொண்டு வருகிறது. இங்கிலாந்திலோ அப்படியில்லை. ஆதலால் பிரிட்டிஷ் சர்க்கார் ஜெர்மனியுடன் யுத்தம் செய்ய துணியமாட்டார்கள்" என்றான்.

மதியீனமான காரியம்

இவ்வார்த்தைகளை கேட்டு விட்டு ஆங்கில யுவன் சும்மா இருப்பானா? அதுவும் அவன் விவரம் தெரிந்திருந்தவனாயிருப்பின் கேட்கவேண்டுமா? அவனுக்கு பிரமாதமான ஆத்திரம் உண்டாகி விட்டது. தனது ஜெர்மன் நண்பர்களுடன் அவன் சண்டை பிடிக்க ஆரம்பித்து விட்டான்.

"யார் சொன்னது நாங்கள் யுத்த சன்னதமாயில்லை என்று? எங்கள் தொழிற்சாலைகளையும் தளவாட உற்பத்திச் சாலைகளை நீங்கள் பார்த்தால் அப்படிச் சொல்லுவதற்கு பயப்படுவீர்கள்? நான் விஷயம் தெரிந்தவன். ஏனெனில் என் பிதா தொழிற்சாலையில் உத்தியோகஸ்தர் ஆயிரக் கணக்கான ஆகாய விமானங்களை உற்பத்தி செய்யும்படி ராஜாங்கத்தாரிடமிருந்த அத்தொழிற்சாலைக்கு உத்தரவு வந்திருக்கிறது" என்றான்.

தான் கூறிய மேற்கண்ட விவரம் மறுநாளைக்குள் ஜெர்மன் வேவு இலாகாவுக்கு அறிவிக்கப்பட்டது என்பதை அந்த முன் யோசனையற்ற ஆங்கில யுவன் அறிந்திருந்தால் அவன் தனது மதியீனத்துக்காக வருந்தியிருப்பான் என்பது நிச்சயம்.

விஷயத்தை அறிந்து கொண்டபின் ஜெர்மன் ரகசிய இலாகா சும்மா இருக்குமா? ஆங்கில யுவனின் தகப்பனாரின் பெயர், அவன் உத்தியோகம், அவன் வேலை பார்த்த தொழிற்சாலை முதலியவற்றை தெரிந்து கொள்வது அதிக சிரமமல்ல. மேற்கொண்டு நடவடிக்கை நடத்தவும் ஜெர்மன் வேவு இலாகா தயாராகியது.

ஜெர்மனிக்கு விஜயம் செய்த யுவனின் தகப்பனுக்கு நல்ல சம்பளம் கிடைத்தபடியால் அவனது குடும்பம் நல்ல ஸ்திதியில் இருந்தது. அதற்கு பணி செய்ய வேலைக்காரர்களும் வேலைக்காரிகளும் இருந்தனர். சமையற் செய்ய ஒருத்தி இருந்தாள்.

சகஜமான தோஷம்

அந்த சமையற்காரிக்கு வேறு ஒரு இடத்தில் அதிக சம்பளத்தில் உத்தியோகம் கிடைத்தபடியால் அவள் அக்குடும்பத்தை விட்டுப் போய் விட்டாள் ஆதலால் அந்த குடும்பத்துக்கு ஒருபுதியசமையற்காரி அவசியம் தேவையாயிருந்தது.

அந்த ஊரில் ஜெர்மனியிலிருந்து குடியேறிய ஒரு ஸ்திரீ ஒரு ஸ்தாபனத்தை நடத்தி வந்தாள். அந்தஸ்தாபனத்தின் அலுவல் "என்னவெனில், தேவையான குடும்பங்களுக்கு பணி மக்களை அமர்த்துவதே. தங்கள் நாடுகளை விட்டு வந்து வேலையில்லாமல் திண்டாடிய பல ஜெர்மனியரும் ஆஸ்திரியரும் அந்த ஸ்தாபனத்தின் ஜாபிதாவில் இருந்தனர்.

ஆகாயவிமான உற்பத்தித் தொழிற்சாலையில் உத்தியோகஸ்தனாய் இருந்தவனது குடும்பத்துக்கு ஒரு சமையற்காரி தேவை யென்பதை உணர்ந்த அந்த ஜெர்மன் ஸ்திரீ தனது ஜாபிதாவிலிருந்த ஒரு ஆஸ்திரிய பெண்ணை சமையற்காரியாக சிபார்சு செய்தாள். அப்பெண்ணுக்கு அக்குடும்பத்தில் உத்தியோகம் கிடைத்தது. தனது சுறு சுறுப்பாலும் திறமையாலும் அவள் தனது யஜமான யஜமாட்டியரது பிரியத்தையும் ஆதரவையும் சம்பாதித்துக் கொண்டாள்.

வேலைக்காரர்களிடம் சகஜமாய் காணப்படும் ஒரு தோஷம் இந்த ஆஸ்திரிய சமையற்காரப் பெண்ணிடம் இருந்தது. அது என்ன வெனில் தனக்கு சம்பந்தமில்லாத விஷயங்களை அறிந்து கொள்வதில் அக்கரை காட்டுவதே.

சந்தோஷத்திற்கு இடம்

சமையற்காரப் பெண்ணுக்கு அவளுக்கு ஆகாய விமான உற்பத்தியைப்பற்றி என்ன சிரத்தை? எனினும் அது விஷயமாய் பேச்சுகள் வந்தால் அவற்றைஅவள் கூர்ந்து கவனிப்பாள். அவற்றைப்பற்றிய விவரங்களை தெரிந்து கொள்ளுவாள்.

சில நாட்களுக்குப்பின் அவளது யஜமானன் உத்தியோகம் பார்த்த தொழிற்சாலையில் தீ விபத்து ஏற்பட்டது. ஆனால் அதிர்ஷ்டவசமாய் பிரமாதமான சேதம் ஒன்றும் இல்லை. முக்கியமாய் விமானங்கள் இணைக்கப்படும் இடத்தில் தீ வரவில்லை.

இந்த விபத்தைப்பற்றி ஆங்கில ரகசிய போலீசார் விசாரணை செய்தனர், இது தற்செயலாய் நேர்ந்ததன்று என்றும் வேண்டுமென்றே யாரோ விஷமிகள் அத்தொழிற்சாலைக்கு நெருப்பிட்டனர் என்றும் சந்தேகிப்பதற்குபல முகாந்திரங்கள் இருந்தன.

ஆங்கில உத்தியோகஸ்தனது குடும்பத்தில் புதிதாய் சமையல் வேலைக்கு அமர்ந்த ஆஸ்திரியப் பெண் உண்மையில் ஜெர்மன் வேவு இலாகாவின் ரகசியப் பணி மகள் என்று சந்தேகிப்பதற்கும் முகாந்திரம் இருந்தது. அவளால் கொடுக்கப்பட்ட விவரங்களை அறிந்து கொண்ட ஜெர்மன் வேவு இலாகா அதிகாரிகள் விமான உற்பத்தியைக் கெடுப்பதற்காக அந்த தொழிற்சாலைக்கு தீ மூட்ட ஆட்கள் அனுப்பினர் என்று சந்தேகிக்கவும் இடம் இருந்தது.

இத்தகையவர் சேவை

ஆனால் மேற்குறிப்பிட்ட விஷயங்களை தெளிவாய் நிரூபிக்க ஆங்கில போலீசாருக்கு ருஜுக்கள் இல்லை. குற்றவாளிகளை தண்டனைக்குக் கொண்டு வர போதுமான சாக்ஷியம் இல்லை.

எனினும் அந்த உத்தியோகஸ்தன் சரியாய் விசாரிக்காமல் ஒரு அன்னிய நாட்டுப்பெண்ணை தன் சமையல் காரியாய் அமர்த்திக்கொண்டதற்காக கண்டனம் செய்யப்பட்டான். அவனுக்கு சமையற்காரியை தேடிக் கொடுத்த ஜெர்மன் ஸ்திரீக்கும் எச்சரிக்கை கொடுக்கப்பட்டது. அவளும் அவளது ஆட்களும் உண்மையில் வேவு பார்க்க வந்தவர்கள் என்று சந்தேகப்படுவதாக ஆங்கில போலீஸ் இலாகா பயமுறுத்தியது. சில நாட்களுக்குப் பின் அவளும் அந்த ஆஸ்திரியப் பெண்ணும் வேறு பல ஜெர்மானியரும் தங்கள் நாட்டுக்குத் திரும்பினர். யுத்தத்துக்கு ஒவ்வொரு நிமிஷமும் தயார் செய்து கொண்டிருந்த ஹிட்லருக்கு அவர்களைப் போல் எத்தனையோ நபர்களது சேவை தேவையாயிருந்தது.

விசித்திர விவாகம்

திருவனந்தபுரம் எக்ஸ்ப்ரஸில் என்றைக்குமே கூட்டத்திற்குக் கேட்கவேண்டியதில்லை. ஆனால், அன்று சென்னை சர்க்கார், ஜனங்களையெல்லாம் போய்விடுவது மேல் என்று எச்சரித்து அறிக்கை விட்டபிறகு ஏராளமான கூட்டம்! வண்டியில் உட்காரக்கூட இடமில்லாமல் நின்றுகொண்டே சென்றனர் பலர். ஆயிரம் ஆயிரமாய் செலவு செய்து கட்டிய வீடு வாசல்களை விட்டு விட்டுப் போகிறோமே, திரும்பி வந்து பார்க்க முடியுமோ என்ற கவலை பெரியவர்களுக்கு. ரயிலில் பிரயாணம் செய்ய ஒரு சந்தர்ப்பம் கிடைத்ததே என்ற சந்தோஷம் சிறு குழந்தைகளுக்கு!

முத்து ஒரு மூலையில், வண்டியின் ஜன்னலோரத்திலமர்ந்து, வெளிப்பக்கம் பார்த்துக்கொண்டே பிரயாணம் செய்தான். வண்டிக்குள் மங்கலான வெளிச்சம் இருந்தபடியால் அவன் முகம் சரியாகத் தெரியாவிட்டாலும், கூர்ந்து யாரும் கவனித்திருந்தால் அவனும் ஏதோ கவலையிலாழ்ந்திருப்பது தெரிந்திருக்கும். அவனுக்குச் சென்னையில் வீடுவாசலோ, சொத்து சுதந்தரமோ, ஒன்றுமே கிடையாது ஆபீஸில் கோடை விடுமுறை விடப்பட்டதும் வழக்கம்போல் தன் பெற்றோர்களைக் காண மதுரைக்குச் சென்றுகொண்டிருந்தான். ஒவ்வொரு வருஷமும் போகும்போது தன் சகோதர சகோதரிகளுக்கு வேண்டிய விளையாட்டுச் சாமான்கள், துணி மணி முதலியவைகளை வாங்கிச் செல்வான். ஆனால் இந்தத்தடவை அவனுக்கு ஊருக்குப் போவதே பிடிக்காமலிருந்தபடியால் தன் சகோதர சகோதரிகளைப் பற்றி நினைக்கவே முடியவில்லை; அதில் சிரத்தையில்லை. சென்னையில் ஹோட்டல்கள் எல்லாம் மூடிய பிறகும் கூட தன் வீட்டிற்குப் போக மனமில்லாதபடியால் தானே தன் சிறு அறையில் சமயல் செய்து சாப்பிட்டுக் கொண்டிருந்தான். ஆனால், வீட்டிலிருந்து அடிக்கடி வந்த கடிதத்தைப் புறக்கணிக்க முடியாமல் ஒருவாறு மனதைத் திடப்படுத்திக்கொண்டு புறப்பட்டான். அப்படி அவனுக்கு ஏற்பட்ட கவலை என்ன?

* * * *

மனித வாழ்க்கையில் இன்பமும் துன்பமும் மாறி மாறி வரும் என்பார்கள். ஆனால் முத்துவின் வாழ்க்கையில் அவனுக்கு விபரம் தெரிந்த நாள் முதல் அன்று வரை, அதாவது அவனுக்கு 27 வயதுவரை. கஷ்டம் கஷ்டம்—ஒரே கஷ்டம் தான். இவ்வளவிற்கும் அவன் நல்ல உத்தியோகத்தில் தானிருந்தான். அவன் செலவிற்குப் போதுமான வருமானம் வந்துகொண்டுதானிருந்தது. அப்படியிருந்தும் அவனுக்குச் சந்தோஷமே கிடையாது. காரணம்? அது அவனுக்கே தெரியாது. அவனுடைய நண்பர்களில் சிலர் "உனக்கு ஒரே ஒரு குறைதான். கல்யாணம் முடிந்துவிட்டால் நீ சந்தோஷமாய்க் காலம் கழிப்பாய்" என்று கிண்டலாகவும், சிலர் உண்மையாகவும் கூறுவார்கள். அவனுக்கு அதில் நம்பிக்கையில்லை. கல்யாணத்தைப் பற்றி அவன் கவலைப்பட்டதே இல்லை. அந்த விலங்கு கழற்ற முடியாத பெரும் விலங்காய் வந்துவிடுமோ என்ற பயமே அதிகமாயிருந்தது. எனினும் சிற்சில சமயங்களில் "நாம்தான் துன்பத்தின் எல்லையையும் கடந்துவிட்டோமே. அதனால் ஒரு சமயம் விவாஹத்திற்குப் பிறகு ஏதேனும் ஒரு துளி இன்பமாவது கிட்டினாலும் கிட்டலாம்" என்று எண்ணுவான். ஆனால், இதைத் தன் பெற்றோர்களிடம் எப்படிச் சொல்வது? பல வருஷங்கள் இப்படியே கடந்தன. அப்படியிருக்கையில் தான் அவன் கல்யாண விஷயத்தைப்பற்றி அவனையும் அறியாமல் அவன் பெற்றோர்கள் ஏற்பாடு செய்துகொண்டிருந்தது அவனுக்குத் தெரியலாயிற்று. அதை அவன் தடுக்கவும் முயற்சிக்கவில்லை. நடக்கிறபடி நடக்கட்டும் என்று இருந்துவிட்டான்.

ஒரு நாள் ஒரு கடிதம் வந்தது. அவன் சந்தேகப்பட்டபடியே அது அவன் கல்யாணத்தைப்பற்றியதுதான். அவனுடைய நண்பன் ஒருவன் எழுதியிருந்தான்.

"உன்னுடைய விவாஹம் சம்பந்தமாக உன் பெற்றோர்கள் பல இடங்களிலிருந்தும் பெண்களின் ஜாதகங்களை வரவழைத்துப் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். இந்த விஷயம் உன் தமக்கைக்கு மிக்க வருத்தத்தை உண்டுபண்ணியிருக்கிறது. அவர்கள் பெண்ணை உனக்குக் கொடுக்கலாமென்று இத்தனை நாள் ஆவலாயிருந்தார்களாம். உன் பெற்றோர்கள் உன் தமக்கையைக் கேட்காமலும் அவர்களுக்குத் தெரியாமலும் காரியத்தை முடிக்க முயல்கிறார்களெனத் தெரிந்து மிக்க மனமுடைந்து போயிருக்கிறார்கள். இப்போது உன்னுடைய அபிப்பிராயம் என்னவென்பதைத்தான் உன் தமக்கை அறிய விரும்புகிறார்கள்?' என்று கண்டிருந்தது கடிதத்தில்.

முத்து அதைப்பற்றி இரண்டு மூன்று நாள் இரவு பகலாய் யோசித்தான்.

"ஆம்,வாஸ்தவம்தான்.என்னை எடுத்து வளர்த்து என்னால் எவ்வளவோ கஷ்டப்பட்டிருக்கும் அந்த அக்காளுக்கு நான் என்ன கைம்மாறு செய்ய முடியும்? வீட்டிலேயே முதல் குழந்தையாக பிறந்தபடியால் அவர்களால் தான் நாங்களெல்லாம் போஷிக்கப்பட்டோம் என்று என் தாயார் அடிக்கடி சொல்வார்கள். அது மாத்திரமல்ல. அவர்கள் கல்யாணம் முடிந்து 15, 20 வருஷங்களாகிவிட்டன. இன்னும் எங்கள் வீட்டில் நிகழும் இன்ப துன்பங்களில் சரி பங்கு எடுத்துக்கொண்டுதானிருக்கிறார்கள். எந்தவிதமான உதவி செய்வதற்கும் அவர்கள் தயங்குவதில்லை. அப்படியிருக்கையில் அவர்கள் ஒரு காரியத்தை நம்மிடம் எதிர்பார்க்கும்போது ஏன்செய்யக்கூடாது...?"

ஆனால் சில வருஷங்களுக்கு முன்பு அவன் தகப்பனாருக்கும், அக்காள் கணவருக்கும் ஒரு அற்ப காரணத்திற்காகப் பிரமாதமான சண்டை ஏற்பட்டுவிட்டது; வாய்ச்சண்டைதான்! இரண்டாவது ஆசாமி சற்றுக் காரமாகவே இரண்டொரு சொல்லம்புகளை வீசிவிட்டார். அன்று முதல் இரு வீட்டாருக்கும் பேச்சு வார்த்தையே நின்றுவிட்டது. எனினும் இருவருடைய வீடுகளும் ஒரே தெருவில் இருந்தபடியால் இவர்கள் குழந்தைகள் அவர்கள் வீட்டிற்கும், அவர்கள் குழந்தைகள் இவர்கள் வீட்டிற்கும் வருவது போவது நிற்கவில்லை. அதை இருதரப்பாரும் தடுக்கவுமில்லை. குழந்தைகள் தானே என்று பொறுத்துக்கொண்டார்கள். இப்போது முத்துவின் இஷ்டம்போல் அவன் கல்யாணத்திற்கு அக்காள் மகளை முடிப்பதற்கு அவன் தகப்பனார் சம்மதிக்கமாட்டார் என்பது அவனுக்கு நன்றாய் தெரியும். அப்படியானால் அக்காள் மனதை எப்படித் திருப்தி செய்வது? பெரிய 'தர்ம சங்கட'த்தில் அவன் தவித்துக்கொண்டிருந்தான். அப்படியிருக்கும்போது மதுரையிலிருந்து அவனுக்கு அடிக்கடி கடிதங்கள் வந்துகொண்டிருந்தன. 'நேரில் புறப்பட்டு வந்து உன் அபிப்பிராயத்தை எங்களுக்குச் சொல்லி இந்தக் காரியத்தை முடித்துவிட்டுப் போய் விடவேண்டும்' என்று இருதரப்பாரும் கண்டிப்பாய் எழுதியிருந்தார்கள்.

அதற்கிணங்கவே அவன் சென்னையை விட்டுப் புறப்பட்டுப்போய்க்கொண்டிருந்தான்.

* * * *

அடுத்த நாள் மதுரையில் போய் இருவரிடமும் என்ன சொல்லி எப்படி தப்புவது என்பதே அவனைப் பெரிதும் வாட்டியது. அந்தக் கவலையுடன் அவன் வண்டியின் ஜன்னலோரமாய் அமர்ந்திருந்தான்.

மதுரைக்கு வந்து இரண்டு நாளாகியும் அவன் கல்யாண விஷயத்தைப் பற்றி ஒருவருமே பிரஸ்தாபிக்கவில்லை. அவன் கொண்டிருக்கும் முடிவு தங்கள் எண்ணத்திற்கு எதிராக இருந்துவிட்டால் என்ன செய்கிறது என்று யோசித்தே ஒருவரும் கேட்க இஷ்டமில்லாமலிருந்துவிட்டார்கள். மூன்றாவது நாள் அவன் தகப்பனாரே கேட்டுவிட்டார்.

"முத்து, உனக்கு எத்தனையோ இடங்களில் பெண்கள் பார்த்தோம். ஒன்றும் சரிப்படவில்லை. கடைசியாக பெங்களூரில் பார்த்திருக்கிறோம். நல்ல இடம், படித்த பெண் இந்த மாதமே காரியத்தை முடித்துவிடலாமென்று நினைத்திருக்கிறோம். உன்னிஷ்டம் என்ன?" என்றார்.

"இப்போது என்ன அவசரம்? இன்னும் இரண்டு வருஷம் போகட்டுமே?" என்று மழுப்பினான்.

"ஏன் அப்படிச் சொல்லுகிறாய்? உனக்கென்ன வயது ஆகவில்லையா? எத்தனை நாளைக்குத்தான் ஹோட்டல் சாப்பாடே சாப்பிட்டு உடம்பைக் கெடுத்துக்கொண்டிருப்பாய்? எங்களுக்கும் வயது ஆகி விட்டது. எங்கள் கண் முன்னிலேயே உன் காரியம் முடிந்துவிட்டால் கவலை நீங்கி விடும்."

"இந்தக் காரியத்தில் என்னை முதலிலேயே கேட்டிருந்தால் நன்றாயிருந்திருக்கும்."

"ஏன், உனக்கு இந்த இடம் இஷ்டமில்லையா? பெண்ணை நீ நேரில் பார்த்தால் இப்படிப் பேசமாட்டாய்"

"பெண்ணைப்பற்றி நான் சொல்லவில்லை. இதற்காக அவ்வளவு தூரம் ஏன் சிரமப்பட்டுப் போனீர்கள் என்றுதான் கேட்கிறேன். இந்த ஊரில் உங்களுக்கு ஒரு பெண் கிடைக்காமலா போய் விட்டது?"

"இந்த ஊரில் பார்த்துவிட்டு ஒன்றும் பிடிக்காததுபற்றி அவ்வளவு தூரம் சென்றோம். எங்கள் மனதிற்கு மிகவும் பிடித்திருந்தது,"

"நீங்கள் பெண் பார்த்தது அக்காளுக்குத் தெரியுமா?..."

அவன் அந்தக் கேள்வியைக் கேட்டு வாய் மூடவில்லை. அவன் தகப்பனாருக்குப் பளிச்செனக் கோபம் வந்து விட்டது.

"ஓஹோ, சரி தான். நீ அந்த எண்ணம் வைத்துக்கொண்டு பேசுகிறாயோ? அந்தப் பேச்சையே என் காதில் போடாதே" என்று கடூரமாய் பதிலளித்தார்.

"எனக்கு அக்காள் பெண்ணைத்தான் கல்யாணம் செய்ய வேண்டுமென்று கட்டாயமில்லை. ஆனால் அக்காளுக்காக அவர்கள் வேண்டுகோளைத் தட்டவும் முடியவில்லை."

"அப்படியானால் நாங்கள் செய்திருக்கும் முயற்சியெல்லாம் வீண் தானா?"

"நான் என்ன செய்கிறது? வீணாகப் போனாலும் போகலாம்"

அவர் சற்று நேரம் மௌனமாயிருந்தார்.

"சரி, இந்தக் காரியம் இப்போது நடக்கப்போவதில்லை. என் ஆயுள் உள்ளவரை நான் அதற்குச் சம்மதிக்கவே மாட்டேன்."

"ஏன் அப்படிச் சொல்கிறீர்கள்?"

"ஏனா? ஏன் என்றா கேட்கிறாய்? உனக்குத் தெரியாதா? நான்கு வருஷத்திற்கு முன்

ஜப்பானிய ஆக்ரமிப்புக்காரணமாக சிங்கப்பூரிலிருந்து மக்கள் வெளியேற்றப்பட்டபோது துறைமுகத்தில் எடுத்த படம்.

அந்த மனிதன்—உன் தமக்கை புருஷன்-பேசின பேச்சுக்களை மறந்துவிட்டாயா?"

"ஏதோ கோபத்தில் உளறினார். அதையெல்லாம் பொருட்படுத்தலாமா? 'குற்றம் பார்க்கில் சுற்றமில்லை' யென்பார்கள். அவர் பேசியதற்காக இத்தனை நாள் நாம் அவர்களை ஏறெடுத்தும் பார்க்காமலிருந்தோமே, அதுவே போதும்..."

"சரி. சரி, போதும். உன்னிஷ்டம் எப்படியோ அப்படிச் செய்துகொள். எனக்கும் அதற்கும் சம்பந்தமே இல்லை. நான் இந்த விஷயத்தில் தலையிடவே மாட்டேன்"

"அப்படியானால் நான் அந்தப் பெண்ணை மணப்பதில் உங்களுக்கு விருப்பமே இல்லையா?"

"அதை நான் சொல்ல வேண்டுமா?"

"சரி. நீங்கள் சொல்கிறபடி நானும் ஒப்புக்கொள்ளப் போவதில்லை. என்னிஷ்டத்திற்கு நீங்களும் இணங்கப்போவதில்லை. இந்தக்காரியம் இந்த யுகத்தில் நடக்கப்போவதில்லை. நான் இன்றே புறப்பட்டுச் சென்னைக்குப் போய்விடுகிறேன்" என்று முத்து எழுந்துவிட்டான்.

அவன் தகப்பனார் மறுபடியும் மௌனமாய் யோசனையிலாழ்ந்துவிட்டார்.

தந்தைக்கும் தனயனுக்கும் பேச்சு முறிந்துவிட்டது என்று தெரிந்த அவன் தமக்கை மிக்க மனவேதனைப்பட்டாள். இது எப்படியோ அண்டை வீட்டுக்காரர்களில் சிலருக்கும் தெரிந்துவிட்டது. பந்துக்கள் போல் பழகிய அவர்கள இந்த விஷயத்தில் ஒரு சமரசத்தை உண்டுபண்ண முன் வந்தார்கள்.

"முத்து சொல்வதில் எவ்வளவோ நியாயம் இருக்கிறது. அவன்,கேவலம் பெண்ணுக்காக ஆசைப்பட்டுச் சொல்வதாகத் தெரியவில்லை. தன் தமக்கையின் மேலுள்ள வாஞ்சையால். அவள் மனம் நோகாமல் நடந்துகொள்ள வேண்டுமென்றே பேசுகிறான். ஆகையால், பழய பகைமையை எல்லாம் மறந்துவிட்டு இதற்கு நீங்கள் இணங்கி விடுவதுதான் மேல்" என்று அவன் தகப்பனாரிடம் வந்து சொன்னார்கள் சிலர்.

"நீயும் தான் ஏன் இப்படி ஒரே பிடிவாதமாக இருக்கிறாய்? உன் தகப்பனாரும் நல்ல இடத்தில் தானே பெண் பார்த்திருக்கிறார். பத்தாயிரம் ரூபாய் பெண்ணுக்கு மாத்திரம் எழுதி வைப்பதாகச் சொல்லியிருக்கிறார்களாமே. உன் தமக்கை வீட்டிலிருந்து என்ன வந்துவிடப் போகிறது?" என்று முத்துவின் மனதையும் கலைக்கப் பார்த்தார்கள் சிலர்.

இருவரில் ஒருவராவது தன் உறுதியை மாற்றிக் கொள்ளத் தயாராயில்லை. அவன் தகப்பனார் ஒரே ஒரு நிபந்தனையிட்டார். 'முத்து அவனிஷ்டப்படி அவன் தமக்கையின் பெண்ணையே மணந்து கொள்ளட்டும். எனக்கு ஆக்ஷேபனை இல்லை. ஆனால் நான் அந்தக் கல்யாணத்திற்கு வரவும் மாட்டேன். பண உதவியும் செய்யமாட்டேன்' என்று கண்டிப்பாக தெரிவித்து விட்டார்.

முத்துவின் பயணம் அன்று தடைபட்டுவிட்டது!

தன் தகப்பனார் பண உதவி செய்ய மறுத்ததைப் பற்றி அவன் கவலை கொள்ளவில்லை. அவர் இல்லாமல் காரியத்தை நடத்தினால் பார்ப்பவர்கள் கேவலமாய் நினைப்பார்களே என்ற கவலை தான். எனினும் அவர் ஒருவாறு சம்மத மளித்ததே பெரிய காரியம்; அந்தச் சந்தர்ப்பத்தையும் நழுவ விட்டால் இன்னும் சில நாளில் அவர் எண்ணம் எப்படியெல்லாம் மாறுமோ என எண்ணி கல்யாணத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளை யெல்லாம் அன்று முதல் துரிதமாகச்செய்ய முனைந்துவிட்டான். அவனுடைய நண்பர்கள் இந்த விஷயத்தில் அவனுக்குப் பெரிதும் உதவியாயிருந்தார்கள்.

கல்யாண தினம் நெருங்க நெருங்க அவனுக்கு அவன் குடும்பத்தில் எதிர்ப்புகள்—அவன் தகப்பனார் கக்ஷி—வலுத்துக் கொண்டே போவதையறிந்தான் அவன் தமயன் இருவர். இன்னும் மற்ற நெருங்கிய சில உறவினர்கள் எல்லாம் அவன் கல்யாணத்தைப் பகிஷ்கரிக்கப் போவதாகக் கேள்விப்பட்டான். அந்த மட்டோடு நிறுத்திவிட்டு எங்காவது ஓடிவிடலாமா என்றுகூடச் சில சமயம் அவனுக்குத் தோன்றும். இவ்வளவு எதிர்ப்புகளுக்கிடையே நடக்கும் ஒரு சுப காரியம் பின்னால் எப்படியாகுமோ என்ற கவலையும் அவனுக்கு உதிக்க ஆரம்பித்தது. எது எப்படியானாலும் சரி எடுத்த காரியத்தை முடிக்காமல் தளரவிடக் கூடாது என்ற ஒரு தைரியமும் ஒரு சமயத்தில் பிறக்கும். இவ்விதமாகப் பல எண்ணங்கள் நிமிஷத்திற்கு நிமிஷம் அவனை வாட்டிக் கொண்டே இருந்தன. எல்லாவற்றிற்கும் மேலாக நாள் நெருங்க நெருங்க, கல்யாணமே நடக்கவொட்டாமல் செய்துவிடப் போவதாக அவன் சகோதரர்கள் வீதந்திகளைக் கிளப்பிவிட்டார்கள். ஆனால், இதை அவன் பொருட்படுத்தவில்லை. ஏனெனில் அவர்கள் அவ்வளவு மோசமாய் நடந்துகொள்ள மாட்டார்கள் என்பது அவனுக்கு நன்றாய் தெரியும்.

கடைசியாக, குறிப்பிட்ட தினத்தில் நல்ல சுப முகூர்த்தத்தில் கல்யாணம் மங்களகரமாய் நடந்தேறியது!

விவாகத்திற்கு வரமாட்டோம் என்று பிடிவாதமாயிருந்தவர்களெல்லாம் அப்படியேதானிருந்து விட்டார்கள். 'எப்படி நடக்கும் இந்தக் காரியம் பார்க்கிறோம் ஒருகை' என்று மிரட்டிக் கொண்டிருந்தவர்களெல்லாம் ஒன்றும் செய்யவே முன்வரவில்லை. ஆகவே, காரியம் தங்கு தடையின்றி நடந்தேறியதில் ஆச்சரியமில்லை.

அதைக் கண்டு உள்ளம் குளிர்ந்த ஆத்மா ஒன்றே ஒன்று தான். அது தான் முத்துவின் தமக்கை— பெண்ணின் தாயார்.

கல்யாணம் முடிந்த மூன்றாம் நாள் பெண்ணை யழைத்துக்கொண்டு மாப்பிள்ளை தன் தகப்பனார் வீட்டிற்குள் நுழைய வந்தபோது "வீட்டிற்குள் அடியெடுத்து வைக்காதே. எங்கள் பேச்சையெல்லாம் மீறி உன்னிஷ்டப்போல் செய்து கொண்டாய். இனி இங்கே உனக்கு இடமில்லை" என்று அவன் தகப்பனார் கண்டிப்பாகச் சொல்லிவிட்டார்!

"நான் என்ன, நம் ஜாதிக்குக் கீழான ஜாதியில் போய் பெண் எடுத்து விட்டேனா? நீங்கள் தான் முதலிலேயே சம்மதித்து விட்டீர்களே. இப்போது இப்படிப் பேசுவது சரியா?" என்று கண் கலங்கக் கேட்டான் முத்து.

"அதெல்லாம் என்னிடம் சொல்லாதே. என்னையும் மீறி நீ இந்த வீட்டிற்குள் நுழைந்தாயானால் நான் இதோ, இப்போதே இப்படியே இந்த வீட்டை விட்டுத் தேசாந்திரியாய்ச் சென்று விடுவேன்......"

"ஐயையோ, இதென்ன வார்த்தைகள்? வேண்டாம். எனக்காக நீங்கள் ஏன் தேசாந்தரம் செல்ல வேண்டும்? நானே போய் விடுகிறேன்" என்று சொல்லிவிட்டு வந்த வழியே திரும்பி விட்டான்.

தன் தமக்கையின் வீட்டில் போய்த் தங்கவும் இஷ்டமில்லை. தமக்கையின் விருப்பத்திற்காகப் பெண்ணை மாத்திரம் தான் எடுத்துக் கொள்ளச் சம்மதித்தானே தவிர, அவர்கள் வீட்டில் நடக்கும் இதர சடங்குகளில் கலந்துகொள்ள முடியாதென்றும் அந்த வீட்டிற்குள்ளேயே நுழைய இஷ்டமில்லையென்றும் ஏற்கனவே தெரிவித்திருந்தான். இதனாலாவது தன் தந்தை மனம் மாறுமா என்று எதிர்பார்த்தான். அவர் தான் வீட்டிற்குள் நுழையக்கூடாதென்றே தடுத்து விட்டாரே! ஆகையால் அன்று இரவே மதுரையிலிருந்து சென்னைக்குப் புறப்படும் திருவனந்தபுரம் எக்ஸ்பிரஸில் கிளம்பிவிட்டான்—அவன் மாத்திரம் தான்.

இப்போதும் அவன் முகத்தில் கவலைதான் குடிகொண்டிருந்தது. கல்யாணம் நடந்ததைப் பற்றியல்ல. தன் உள்ளக் கிடக்கையை—தன் கொள்கையை—தன் தகப்பனாரும், சகோதரர்களும் அறிந்துகொள்ளவில்லையே என்றுதான். ஆனால், உள்ளத்தில் ஒரு அளவற்ற திருப்தி. தன் இஷ்டப்படி தன் தமக்கையின் நீண்ட நாளைய ஆவலைப் பூர்த்தி செய்துவிட்டதற்காக.

ஆறு மாதங்கள் கழிந்தன. அவன் தகப்பனாரிடமிருந்து திடீரென்று ஒரு கடிதம் வந்தது அவனுக்கு.

"கோமதியை (அதுதான் அவன் புதுப் பெண்ணின் பெயர்) இன்னும் பத்து தினங்களில் சென்னைக்கு நானே அழைத்து வரலாம் என்று நினைத்திருக்கிறேன். நல்ல வீடாகப் பார்த்து அமர்த்திவை..." என்று கண்டிருந்தது. அதை அவன் பத்து தடவையாவது திருப்பித் திருப்பிப் படித்திருப்பான்.

சிறு கதை

★

ரா. ஆறுமுகம்

நமது தொடர் கதை

ஸ்ரீகாந்தன்

சரத்சந்திரர் எழுதியது.

(ஸ்ரீ.கு.ப.ராஜகோபாலன் மொழிபெயர்த்தது)

13

முன் கதைச் சுருக்கம்

சிறுபிராயத்தில் இந்திரநாதனுடன் சேர்ந்து ஸ்ரீ காந்தன் தனது இளமைப் பருவத்தை மிகவும் துணிகரமாகவும் நிர்ப்பயமாகவும் கழித்ததுடன் சமூகத்தை விரோதிக்கும் விதமாகவும் நடந்து கொள்கிறான். இதற்கப்புறம் ஸ்ரீகாந்தன் ஓர் நாள் தனது பழைய நண்பனான ஜமீன்தாரின் வீட்டில் பியாரியைச் சந்திக்கிறான். பியாரிக்கு ஸ்ரீ காந்தனிடம் விசேஷ ப்ரீதி: பிறகு அவன் வேறு இடம் கிளம்பி வழியில் ஒரு சந்யாஸியை அடைந்து சில காலம் தங்கி விட்டு அவரிடமிருந்து பிரிகிறான். ஸ்ரீ காந்தனுக்கு தேக அசௌக்யம் ஏற்படுகிறது. இந்தச் செய்தியை யறிந்து பியாரி அவனது உதவிக்கு வருகிறாள். பியாரி வீட்டிற்குப் போன அவன் அங்கு குதூஹலத்தைப் பார்க்கிறான். பிறகு அவன் பியாரிடம் தன் விவாகம், ரங்கூன் பிரயாணம் இவற்றைப் பற்றி சம்பாஷித்து விடை பெற்று கப்பலேறிக் கிளம்புகிறான். கப்பலில் அவனுக்குப் பலருடன் பழக்க மேற்படுகிறது ரங்கூன் போய்ச் சேர்ந்ததும் அவனுக்கு ஏற்படும் அனுபவம் விநோதமாக இருக்கிறது. அங்கு அவன் உத்யோகத்திற்காக அலைந்த பின் அதை சம்பாதிக்கிறான். இதனுடன் தான் கப்பலில் சந்தித்த அபயாவின் புருஷனைக் கண்டு பிடித்து, அவன் அபயாவை ஏற்கும்படி வழி தேடுகிறான். பிறகு அபயாவை ஸ்ரீகாந்தன் சந்தித்தபோது அவள் அவனிடம் பல சீரிய கருத்துகளை வெளியிடுகிறாள். ராஜலக்ஷ்மியிடமிருந்து ஒரு கடிதம் வர ஸ்ரீகாந்தன் ரங்கூனைவிட்டு புறப்பட்டு அவளிடமே வந்து சேருகிறான். சில தினங்களுக்கப்பால் இருவரும் யாத்திரை கிளம்புகின்றனர். ஸ்ரீகாந்தன் மனோநிலை வேறுபடுகிறது. ஸ்ரீகாந்தன் தனியே புறப்பட்டுப் போய், ஊரில் தேக அசௌக்கியமடைகிறான். அந்நிலையில் அவன் ராஜலக்ஷ்மிக்குக் கடிதம் எழுத, அவள் அவனுக்கு சகாயம் புரிய உடனே அங்கு வந்து சேருகிறாள். ராஜலக்ஷ்மி அவனிடம் காட்டும் ப்ரீதி மிகவும் அபாரமானது. ஒருநாள் தன்னையே தான் அவனுக்கு அளித்து விட்டிருப்பதாகவும் அவள் சொல்கிறாள். இருவரும் இதற்கப்புறம் கங்காமாடி கிராமத்திற்குப் போக, வழியில் ஒரு சாதுவை சந்தித்து அவரையும் தங்களுடன் அழைத்துப்போகின்றனர். பிறகு அவர் பிரிந்து போகிறார் பின்பு இவர்கள் தங்கள் கிராமத்திற்கு வருகின்றனர். அங்கு ஒரு ஏழைக் குடும்பத்தில் விவாகம் நடக்கும் முறையும் குசாரி மஹாசயர் மனைவி கூறிய விருத்தாந்தமும் விநோதமாயிருக்கின்றன. மேலும் சில பரிச்சயங்கள் இவர்களுக்கு ஏற்படுகின்றன ராஜ லக்ஷ்மிக்கு மட்டும் ஸ்ரீ காந்தனிடம் மட்டிலாத ப்ரேமை. அவன் தன்னுடன் சகஜமாக நடந்து கொள்வதையே அவள் கோருகிறாள்.

ஸன்னியாசி வஜ்ரானந்தன் தன்னுடைய மருந்துப் பெட்டியுடனும் கான்வஸ் பையுடனும் வெளியே போனதிலிருந்து வீட்டில் பொழுதே போகவில்லை. எப்படியோ ஒரு வாரம் கழிந்தது.

ஒரு நாள் திடீரென்று ரதன் எதிரே வந்து நின்றான். அவன் முகத்தில் தோன்றின இளிப்பை அவனால் மறைக்கமுடியவில்லை. ராஜலக்ஷ்மி வீட்டில் இல்லை அப்பொழுது. ஆகையால் பயப்பட வேண்டிய அவசியமும் இருக்கவில்லை. ஆனாலும் அவன் ஜாக்கிரதையாக நாலாபுறமும் பார்த்துக்கொண்டே வெகு உத்சாகத்துடன் "சமாசாரம் தெரியுமா பாபு?" என்றான்.

"தெரியாதே!" என்றேன் நான்.

"துர்க்கையின் புண்ணியத்தால் அம்மா கடைசியாக இந்த தீர்மானத்துக்கு வந்து விட்டார்கள். இரண்டு மூனறு நாட்களில் நாம் இங்கிருந்து கிளம்புகிறோம்!"

"எவவிடத்துக்கு?"

ரதன் மறுபடி கதவின் பக்கம் பார்த்துவிட்டு அது இனனும் நிச்சயமாகத் தெரியவில்லை. பாட்னாவுக்கோ, காசிக்கோ அல்லது-ஆனால் அவ்விரண்டு இடங்களைத்தவிர அம்மாவுக்கு வேறெங்கும் வீடு கிடையாது!" என்றான்.

நான் மௌனமாக இருந்தேன். இவ்வளவு முககியமாக தகவல் சொன்னதும் நான் உத்சாகமிலலாமல் இருந்ததைக் கண்டு நான் அவன் சொன்னதை நம்பவில்லை என்று எண்ணி அவன் ரகசியமாய் உரக்க" நான் சொன்னது உண்மை பாபு! நாம் கண்டிப்பாகப் புறப்படுகிறோம். அப்படியானால் பிழைத்துவிட்டோம் அல்லவா?" என்றான்.

"ஆமாம்!" என்றேன் நான்.

ரதன் உடனே வெகு சந்தோஷத்துடன் "இன்னும இரண்டு மூன்று நாள் எப்படியாவது தள்ளிவிடுங்கள். கங்காமாடி விவகாரங்கள் பூராவையும் அம்மா குசாரியிடம ஒப்படைத்து விட்டார்கள். இபபொழுது 'அம்மாடி!' என்று மூச்சுவிடலாம். நாம் எல்லோரும் பட்டணத்தில இருந்து பழகினவர்கள்; இந்தக் குக்கிராமத்தில் என்ன செயகிறது பாபு?" என்று சொல்லிவிட்டு சந்தோஷம் தாங்காமல் அவன் என் பதிலைக்கூட எதிர்பாராமல் வெளியே போய் விட்டான்.

ரதனுக்குத் தெரியாத விஷயமே கிடையாது. வேலைக்காரர்கள் நடுவில் நான் ஒருவன்: அவர்களுக்குத் தெரிந்ததற்கு மேல் எனக்கொன்றும் தெரியாது.

மேலாக அவன் ஒரு விஷயம் சொல்லிவிட்டுப் போய்விட்டான். அதன் உள் அர்த்தத்தை எண்ணிப் பார்க்கப் பார்க்க, என் மனது வியக்தமாக ஆரம்பித்தது. ராஜலக்ஷ்மியினுடைய சக்திக்கு அளவே இல்லை. அந்த அபாரமான சக்தியைக்கொண்டு பூமியிலுள்ள யாவற்றையும் அவள் தன் விளையாட்டுக்காக இழுத்து வைத்துக்கொண்டாள். அந்த விளையாட்டில் நான் ஒரு நாள் அவளுக்கு உபயோகமாக இருந்தேன். ஏகாக்ரமான அவளுடைய ஆகர்ஷண சக்தியின் பிரசண்ட வேகத்தில் நான் புரண்டடித்துக் கொண்டு அவளிடம் போய்ச்சேர்ந்தேன். அவள் என்னைப் பிரமாதமாக நினைத்து இழுத்துக் கொள்ளவில்லை: எனக்காக அவள் அநேக சொந்த சௌகரியங்களைத் தியாகம் செய்திருக்கிறாள் என்று நினைத்திருந்தேன. இன்று அது அப்படியல்ல என்று தோன்றுகிறது. ராஜலக்ஷ்மியினுடைய சொந்த சௌகரியத்தின் கேந்திர ஸ்தானம் தெரியாததால் தான் நான் இவ்வளவு நாள் அப்படி நினைத்திருந்தேன். பணம் காசு, சொத்து—எல்லாம் அவள் தியாகம் செய்திருக்கிறான். ஆனால் அதெல்லாம் எனக்காகவா? எனக்கு உதவிய வழியில் அவளே இகலோகத்தின் பாதையில் எவ்வளவு முன்னேற்றம் கொண்டு விட்டாள்! அவளுடைய அந்த முன்னேற்றப் பாதையின் மத்தியில் நிற்பதற்கு எனக்கு இடமில்லை.

மறு நாள் காலையிலேயே ரதன் சொன்னது உண்மைதான் என்று தெரிந்து கொணடேன். அதில் சந்தேகம் இல்லை. கங்காமாடியில் எல்லா வேலைகளும் நின்றன. ராஜலக்ஷ்மியினிடமிருந்தே அதை அறியலானேன். பூஜை காலையில் முடிவு பெற்றது. ராஜலக்ஷ்மி என் அருகில் வந்து உட்கார்ந்து கொண்டு "நாளைக்குப் பின் நான் இந்நேரத்திற்கு சமையல் சாப்பாடு முடித்துக்கொண்டு புறப்பட்டால் சாவகாசமாகப் போய் ஸாயிங்கியாவில் மேற்கே போகும் வண்டியைப் பிடித்து விடலாம் அல்லவா?" என்றாள்.

"முடியும்!"

"ஜமீன்தாரி வேலையைக் கட்டி வைத்து விட்டேன். குசாரி மஹாசயர் எல்லாவற்றையும் பார்த்துக் கொள்ளட்டும்."

"நல்லது தான்"

ராஜலக்ஷ்மி சிறிது நேரம் மௌனமாக இருந்தாள். நான் ஒன்றும மேலே கேள்வி கேட்கத் தயாரில்லை என்று அறிந்து அவள் "பங்குவுக்குக் கடிதம் எழுதி இருக்கிறேன். ஒரு வண்டியை ரிஸர்வ் செய்ய அவன் ஸ்டேஷனுக்கு வந்திருப்பான்" என்றாள.

"கட்டாயம் வருவான். அவன் உன் வார்த்தையை மீறவே மாட்டான்."

"மாட்டான். சாதாரணமாக மாட்டான். ஆனாலும்—சரி, நீ எங்களுடன் கூட வரமுடியுமோ இல்லையோ?"

எங்கே போகவேண்டும் என்று எனக்கு இன்னும் தீர்மானமாக வில்லை, வெகுநேரம் பேசாமலிருந்த பிறகு திடீரென்று அவள் பரபரப்புடன் "உனக்கு டீ கொண்டுவரவில்லையே?" என்றாள்.

"இல்லை, வேலையாக இருப்பார்கள்.

வாஸ்தவத்தில் டீ நேரம் தாண்டிவிட்டது. இந்தமாதிரி இதற்கு முன்னால் நடநதிருந்தால் வார்த்தையும் வசையும்பகரகளையாகப போயிருககும். இப்போது அவள் ஒரு விதமாக வெட்கம் அடைந்து போய் வேகமாக எழுந்து வெளியே ஏகினாள்.

குறித்த பிரயாணநாளன்று ஜமீன்தாரிக் குடிகள் எல்லோரும் வந்து சூழ்ந்து கொண்டார்கள். மாலதியை மற்றுமொரு முறை பார்ககவேண்டுமென்று இருந்தது. ஆனல் அவள் அவ்வூரை விட்டு வேற்றூர் போய் குடித்தனம் செய்ததாகக் கேள்விப்பட்டேன். புருஷனுடன் அவள் அங்கே சௌக்கியமாக இருந்தாளாம். குசாரி சகோதரர்கள் முதல் நாள் இரவு முதலே குடும்பத்துடன் வந்து விட்டார்கள். அவர்கள் எப்படி ஒன்று சேர்ந்தார்கள் என்ற விஷ



பிரிட்டனில் புதிய விமானம்

பிரிட்டனில் யுத்தத்திற்காக புதிய விமானம் தயாரிக்கப்பட்டிருக்கிறது. இதில் வெடிகுண்டுகளைத் தூக்கிக்கொண்டு போக முடியும். பூமிககு சற்று உயரத்திற்குமேல் பறந்து நாச காரியம் செய்யும் இது: எதிரிக் கப்பல் படையை நிர்மூலமாகக இது உதவுகிறது.

யத்தைப்பற்றி ராஜலக்ஷ்மியைக் கேட்க எனக்கு ஆவல் ஏற்படவில்லை. கலசம் நின்று விட்டதென்றும் அவர்கள் மனதில் பழைய மனஸ்தாபம கொஞ்சங்கூட இல்லை என்பதை மட்டும் அவர்கள் முகங்களிலிருந்து அறிந்து கொண்டேன்.

சுநந்தை தன் மகனைக் கூட்டிக் கொண்டு வந்து எனக்கு நமஸ்காரம் செய்து "நீங்கள் எங்களை எல்லாம் மறந்து விடக் கூடாது!" என்றாள்.

"நன்றாயிருக்கிறது!" என்றேன்.

"குழந்தைக்கு ஆசிர்வாதம் செய்யுங்கள்."

"சுனந்தா, அதென்ன அப்படிக் கேட்கிறாய்? உன்னைப் போன்ற தாயைக்கொண்ட குழந்தைக்கு என்ன ஆசிர்வாதம் செய்வதென்று எனக்குத் தெரியவில்லை."

ராஜலக்ஷ்மி அவளை அப்பொழுது ஏதோ காரியமாக உள்ளே அழைத்துக் கொண்டு போனாள். சுநந்தை கேட்டதாக "குழந்தை உன்னைப் போல பெரிய மனிதனாக வேண்டும்" என்றாள் ராஜலக்ஷ்மி.

"பார்த்தாயா சுனந்தா, உன் குழந்தையை லக்ஷ்மி எப்படிக் கேலி செய்கிறாள் என்று"

நான் சொல்லி முடிப்பதற்குள் ராஜலக்ஷ்மி 'குழந்தை விஷயத்தில் நான் கேலியா செய்வேன்? அதுவும் போகிறபொழுது?" என்று சொல்லி விட்டுச் சிறிது நேரம் ஸ்தம்பித்து நின்று விட்டு "நானும் அவள் தாய் போல ஆசிர்வாதம செய்கிறேன்-பகவான் அவளுக்கு இப்பேர்ப்பட்ட புருஷனை அளித்தது பெரும் பாக்கியம்" என்றாள்.

திரும்பிப் பார்த்தேன். அவள் கண்களில் நீர் நிறைந்திருந்தது. மேலே அவள் ஒரு வார்த்தை கூடச் சொல்லாமல அவ்விடம் விட்டுப் போய் விட்டாள்.

மறு நாள் கண்ணும் கண்ணீருமாக கங்காமாடியை விட்டுப் புறப்பட்டோம். ரதன் கூட அடிக்கடி கண்ணைத் துடைத்துக்கொண்டான். எல்லோரும் திரும்பிவருவதாக வாக்களித்தார்கள். நான் மட்டும் அப்படிச்செய்ய முடியவில்லை. "இந்த உயிரில் இனிமேல நான் அங்கே திரும்பப்போவதில்லை என்று எனக்கு நிச்சயம். எனவே அவ்வூரைவிட்டுச் சென்றபோது அடிக்கடி திரும்பிப்பார்த்துக் கொண்டே "அளவற்ற மாதுரியமும் வேதனையும் கலந்த ஒரு காட்சி முடிவடைநது கொண்டிருந்தது என்று எண்ணலானேன்.

சாயங்காலத்திற்கு மேல் நாங்கள் ஸாயங்கியாவிற்குப்போய்ச் சேர்ந்தோம். ராஜலக்ஷ்மியின் கட்டளை ஒன்றையும் பங்கு குறைப்படுத்தவில்லை, எல்லா ஏற்பாடும் செய்துவிட்டு அவனே பிளாட்பாரத்தில் வந்து காத்துக் கொண்டிருந்தான். தாயை வண்டிக்கு அழைத்துக்கொண்டு போனான். ஆனால் அவன் என்னுடன் அதிகமாக நெருங்கிப் பேசவில்லை.

வண்டி புறப்படுவதற்கு ஐந்து நிமிஷங்கள் இருந்தன, ஆனால் என் வண்டி கல்கத்தா போவது பின்னிரவில் தான். அசைவற்று ஒரு பக்கம் நின்று கொண்டிருந்தேன். ராஜலக்ஷ்மி ஜன்னல் வழியாக கையை நீட்டி சமிக்ஞை செய்து என்னைக் கூப்பிட்டாள். நான் அருகே போனதும் "கொஞ்சம் உள்ளே வா!" என்றாள். உள்ளேபோனதும் கையைப் பிடித்து என்னைப் பக்கத்தில் உட்கார்த்திக்கொண்டு 'நீ சீக்கிரம் பர்மா போகவேண்டுமா? போவதற்கு முன்பு ஒரு தரம் உன்னைப் பார்க்கலாமா?" என்றாள்.

"ப்ரயோஜனமிருந்தால் பார்க்கிறது."

"வாழ்க்கையில் பிரயோஜன முள்ளது என்று ஒன்றும் கிடையாது, சும்மா இன்னுமொரு தடவை பார்க்க விரும்புகிறேன். வருகிறாயா?"

"வருகிறேன்."

"கல்கத்தா போனதும் கடிதம் எழுது."

"எழுதுகிறேன்."

கடைசி மணி அடித்து விட்டது. கார்டு துரை பச்சை விளக்கை அடிக்கடி ஆட்டி உத்தரவு கொடுத்தான். ராஜலக்ஷ்மி எனக்கு நமஸ்காரம் செய்து விட்டுக் கீழே இறங்கி விட்டாள். நான் கீழே இறங்கி கதவைத்தாளிடுவதற்கும் வண்டி புறப்படுவதற்கும் சரியாக இருந்தது.

* * * *

கல்கத்தா போனதும் அவளுக்குக் கடிதம எழுதினேன். பதிலும் கிடைத்தது. அங்கே வேலை அதிகமில்லை; இருந்ததும் சிறிது நேரத்தில் முடிந்து விட்டது. பர்மா போக ஏற்பாடு செய்வதுதான் பாக்கி. ஆனல் அதற்கு முன வாக்களித்தபடி ராஜலக்ஷ்மியை ஒருதரம் பார்க்க வேண்டும்.

ஒரு வாரம் கழிந்தது. மனதில் பல சந்தேகங்கள். வெளியூர போக அனுமதித்து விடுவாளா? தடுப்பாளா? அவள் காசியில் இருந்தாள். அவள் விலாஸமும தெரியும், போய்விட்டு வந்து விடுவதென்றே புறப்பட்டேன்.

காசியில் அவள் வீட்டுக்குப் போகும்போது பகல் நேரமாகி விட்டது. பங்கு என்னைப் பார்த்ததும் திடுக்கிட்டுப் போனான். பிறகு தன் அரைக்கு என்னை அழைத்துக்கொண்டு போய் உட்கார வைத்து "நீங்கள் பர்மாவிற்குப் போய் விட்டீர்கள் என்று நினைத்தோம்!" என்றான்.

"நாங்கள்" என்பது யாரைக குறித்தது என்று அவனை நான் கேட்கவில்லை.

"உங்கள் சாமான்கள் வண்டியில்—"

"இல்லை, சாமான் ஒன்றும் கொண்டு வரவில்லை?"

"இல்லையா! இரவே திரும்பலாமென்றா?"

"அப்படித்தான் யோசனை"

சற்று நேரம கழித்து சாப்பிட உடகார்ந்தோம். ராஜலக்ஷ்மி வந்து எனக்கு நமஸ்காரம் செய்தாள்.

"வண்டியில் ரொம்ப கூட்டமோ?" என்றாள்.

இதைத் தவிர வேறொன்றும் பேசுவதற்கில்லையா!

"இல்லை" என்றேன் சிறிது நேரம் கழித்து.

சாதம் தொண்டையை அடைத்தது. எப்படியோ அதை விழுங்கினேன். என்றாவது இந்தப் பெண்களிடமிருந்து எனக்கு விடுதலை உண்டா என்று பிரமிக்கலானேன்.

"நீங்கள் இன்றிரவே போவதாகச் சொன்னீர்கள் என்று பங்கு சொன்னான்."

"ஆமாம்!"

"என் குருதேவர் வந்திருக்கிறார்"

மாலையில் அவரைச் சந்தித்தேன். நல்ல மனிதர் தான். என் விஷயம் முழுவதும் அவருக்குத் தெரியும். ராஜலக்ஷ்மி குருவினிடமிருந்து ஒன்றையும் ஒளிக்கவில்லை! அநேக உபதேசங்கள் செய்தார்.

"ராஜலக்ஷ்மியைப் போல இவ்வளவு உண்மையான உணர்ச்சி படைத்தவர்களை யாரையும் நான் பார்த்ததில்லை" என்றார்.

நான் மௌனமாக இருந்தேன்.

வண்டிக்கு நேரமாயிற்று. வாசலில் வண்டி வந்து நின்றது. குருதேவரிடம் விடைபெற்றுக் கொண்டு நான் வண்டியில் போய் உட்கார்ந்து கொண்டேன். ராஜலக்ஷ்மி அடிக்கடி என் கால்களைத் தொட்டு கண்ணில் ஒத்திக்கொண்டாள். ஆனால் ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை. அவளுக்கு அப்பொழுது அது சாத்தியமில்லைபோலிருந்தது. நல்லவேளையாக இருட்டில் முகமும் தெரியவில்லை. என்ன சொல்வதென்று யோசித்தேன் கடைசிப் பிரிவினையின் விரதம் மௌனத்தில் ஸபலமடைந்தது.

வண்டி புறப்பட்டதும் என் கண்களில் கண்ணீர் கொட்டிற்று. அந்தக்கரண சுத்தியாக 'நீ சுகமாக இரு திருப்தியுடனிரு. லட்சியத்தில் வெற்றி பெறுவாயாக' என்று வாழ்த்தினேன். வண்டியின் கடகட சத்தத்தில் கங்காமாடியின் அனுபவங்கள் எல்லாம் சிதைந்தன.

அன்றொரு நாள் விடைபெற்றுக் கொண்டபொழுது மனதில் உதித்த எண்ணங்கள் எல்லாம் இன்றும் உதித்தன

அவளுடைய வாழ்க்கை நாடகத்தின் அமைப்பு அழியாப்புகழ் பெற்றதென்று தோன்றிற்று. கதையாகக் கட்டினால் மங்காத ஒளியுடன் பிரகாசிக்கும் போல் பட்டது.

ஆனால்-என் பதை-அதைச் சொல்லக் கூடாது நான் வேறெங்கோ போகிறேன்-என்னைப் போல சேற்றில் மூழ்கிக் கிடக்கும் அபயா இருக்கும் இடத்தை நோக்கி!

"ராஜலக்ஷ்மி, உன்னுடைய புண்ணிய வாழ்க்கை மேன் மேலும் உயர்வு பெறும். உன்னால் தர்மத்தின் ஒளியே இன்னும் ஒளிர்வு பெறும!" என்று மனதில் சொல்லிக் கொண்டேன்.

அபயாவின் கண்ணீர் நிறைந்த முகம் மறுபடியும் நினைவுக்கு வந்தது.

வண்டி ஸ்டேஷனுக்கு வந்து விட்டது. வண்டியை விட்டு இறங்கினேன்,

ரதன் வந்து வணங்கினான்.

"ஆமாம் பாபு, வெளி நாட்டில் வேலைக்காரன் கிடைக்காவிட்டால் எனக்குத் தகவல கொடுங்கள்?

வண்டியின் விளக்கொளி ஒரு நிமிஷம் அவன் முகத்தில் விழுந்தது. ஆச்சரிய மடைந்து நான் "ஏன் அழுகிறாய் ரதன்?" என்றேன்.

அவன் பதில் சொல்லவில்லை. கண்களைத் துடைத்துக் கொண்டு மற்றொரு முறை வணங்கிவிட்டு வேகமாக இருளில் மறைந்தான்.

என்ன ஆச்சரியம்! அதே ரதனா இவன்?

(மூன்றும் பாகம் முற்றிற்று.)

பிரபல ஜோதிஷர்

மஹா ராஜாக்களால் தங்க மெடல்கள் பரிசு பெற்றவர் ஒரு ஜாதகம் கணிக்க ரூ.2. நேரில் ஒரு ஜாதகம் பார்க்க ரூ.5. மாதவாரி ஒரு வருஷ பலன் எழுத ரூ.5. ஆரூடம்3கேள்விகளுக்கு ரூ. 1. மேல் கேள்வி 1-க்கு

அணா 8. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை. பண்டித காழியூர் ம. ஸ்ரீனிவாஸாச்சாரியார், திருநீர்மலை, குரோம்பேட்டு போஸ்டு, எஸ். ஐ. ஆர்.

நான் புகழ்ந்தேன். ஆகவே, இதோ முதலில் காட்டிய தங்கக் குடத்தையும் வெள்ளிக் குடத்தையும், நீயே பெற்றுக்கொள்வாயாக!'' எனக் கூறி இரு குடங்களையும் கொடுத்து மறைந்தாள்.

இவற்றைக் கண்ட முருகன், வெகு ஆனந்தம் கொண்டு, அவ்வனத்திற்கு கர்த்தாவும், தன்னை ஆதரித்தவருமாகிய மகானிடம் சென்று, அவரது பாதத்தருகில் அவற்றை வைத்து, அது வனதேவதையால் கிடைத்த அதிசயத்தை விவரமாகக் கூறினான்.

மகானும் அதைக் கேட்டு "பேராசை கொள்ளாத நீ பெரு வாழ்வு வாழ்வாயாக'' எனக் கூறி அவனை அது முதற்கொண்டு நல்லவனாகக் கருதி அளவற்ற ஆஸ்தியையும் தந்து வீட்டிற்கு அனுப்பினார்.

முருகன் தங்க குடத்தினாலும். மகான் தந்த செல்வத்தினாலும் கந்தனை விட பன் மடங்கு பணக்காரனாகி உலகில் யாவரும் நல்லவன் எனக் கொண்டாடும்படி பிரகாசித்தான்.

இதைக் கண்ட கந்தன், மனம் பொறுது தானும் அம்மகானிடம் சென்று, அவர் மூலம் வேலைக்கு அமர்ந்து வனதேவதையிடம் இருந்து ஒரு தங்கக் குடமும் பெற வேண்டும் என்ற எண்ணத்துடன் ஒரு பொத்தற்குடமாகிய இரும்புக் குடமொன்றை எடுத்துக்கொண்டு மகானிடம்சென்று "நானோ பரம ஏழை! என்னை தாங்கள் ரக்ஷித்து ஒரு வேலை கொடுத்தால் அதைக் கொண்டு பிழைப்பேன்'' என்று கோரினான் கந்தன்.

மகானும், அவன் விருப்பப்படியே தன் தோட்டத்திற்கு நீர் பாய்ச்ச வைத்துக் கொண்டார். கந்தனும் வேலைக்கமர்ந்த மூன்றாம் நாள் தன் பொத்தற் குடத்தை கயிற்றைக் கொண்டு கட்டி நீர் சேந்தாது, அக்குடத்தை, அப்படியே கிணற்றில் போட்டு விட்டு அழத் தொடங்கினான்.

"ஐயோ! நான் பரம ஏழையாயிற்றே. இந்த இரும்புக் குடத்தைக் கொண்டு, பிழைத்து வந்த நான் இனி எவ்வாறு பிழைப்பேன்'' என்று மேலுக்கு அழுதான்.

வனதேவதையும், அவன் உள்ளத்தை அறிந்துகொண்டு, அவன் மனப்படியே ஒரு தங்கக் குடத்தை எடுத்து அவன் முன் நீட்டி, "அன்பா! இது உன்னுடையதானால் பெற்றுக் கொள்'' என்றாள்.

உடனே கந்தன், "ஆம். இது என்னுடையதுதான். இதைக் கொடுங்கள்'' என்று கூறி அதை வாங்க இருகரங்களையும் நீட்டினான்.

உடனே தேவதை அவன் முன் பிரத்யக்ஷமாகி "உன் குடம் இரும்பினால் செய்யப்பட்டது. தங்கக்குடமாக பெற்றுக் கொள்ள ஆத்திரப்பட்டாய் நீ. எந்த குடமும் உனக்கு கிடைக்காது. மேலும் தனவந்தனாகிய நீ நான் பரம ஏழை என்று கூறியதினால் நீ உண்மையாகவே, பரம தரித்திரனாய் ஏழையாகக் கடவாய்'' என சாபம் இட்டு மறைந்தாள்.

சாபம் பெற்ற கந்தன் தன் கதியை நினைத்து வருத்தபட்டு, அம்மகானிடம் சென்று, "உள்ளதும் பரிகொடுத்த நொள்ளையனாய் இருக்கின்றேன், ஸ்வாமி. என்னை தாங்கள்தான் ஆதரிக்க வேண்டும்.'' எனக் கேட்டுக்கொண்டான்.

"ஆத்திரக்காரனுக்கு புத்திமட்டு'' என்னும் முதுமொழியை அவனுக்கு மகான் போதித்து வனதேவதையால் கைவிடப்பட்ட நீ என்னிடமும் கைவிடப்படுவாயாக'' எனக் கூறி அவனை அனுப்பிவிட்டார்.

கந்தன் வீடு வந்ததும் சிறிது நாளைக்கெல்லாம் பரம ஏழையாகி "தங்கக் குடத்தால் என் தனத்தைத் தோற்றேன்'' என ஏங்கினான்.

ஆரோக்யமான குழந்தை

ஆரோக்யமான குழந்தைகளுக்கு தவருமல் மலம் வெளிவர வேண்டும். அடிக்கடி இதை உபயோகித்தால் மலம் வெளிப்படும்.

Ba-Ba Water

குழந்தைகளது அமிர்தம். எங்கும் விற்கப்படுவது.

பா-பா வாடர் மான்யுபாக்சரிங் கம்பெனி, ஹைதராபாத். (தக்காணம்)

பாபாலாலின்

இணையற்ற வைரங்கள்

உத்திரவாதமுள்ள நகைகள்

பாபூலால் & கம்பெனி,

"RAMAKOTI BLDG."

ராட்டன் பஜார், பி. டி., மதராஸ்.

நாம், பழைய 216, சைனாபஜார் கட்டிடத்திலிருந்து மேற்கண்ட இடத்திற்கு மாற்றியிருக்கிறோம் என்பதைக் கவனிக்கவும். ஞாயிற்றுக்கிழமை பகல் 1 மணிவரைதான் கடை உண்டு.

அமிர்தாஞ்சன்

போலிகள் எச்சரிக்கை

"சுதேஹமித்திரன்"

எல்லாவித நோய்களையும் தீர்க்கும்.

அமிர்தாஞ்சன் லிமிடெட்,

பம்பாய் - சென்னை - கல்கத்தா.

வீதிகளிலும் நம்பிக்கையற்ற கடைகளிலும் வாங்காதீர்கள்.

நஞ்சன்கூட பல்பொடி

I. D. L. G. மெடிகேடட்

பல வியாதிகளைத்தடுக்கவும். குணப்படுத்தவும்

ஊக்கம், உற்சாகம் ஜீரண அஜீர்ணா, பித்த சமனி

உஷ்ண சமனி கூலாயில் ஸ்நான தைலம்

கவனிக்க போலிகளால் பற்களுக்கே அபாயம்

சோல் ஏஜண்ட்ஸ்: யுனைடெட் கன்ஸர்ன், 54, பந்தர் தெரு, மதருஸ் (உதவி வைத்தியர் Dr. P. S. C. மணி) (தபால் மூலம் சிகிச்சை பெறுக)





கே. சுவாமிநாதன் & கோ

24, எர்ரபாலு செட்டித் தெரு, மதராஸ்.

ரைஸ் மில், மாவு மில், சீக்காய் & காபி மிஷின், பம்பு வியாபாரமும், எல்லாவித காஸ்டிங் வேலைகளும், ஆயில் எஞ்சின் ரிப்பேர்களும் செய்யப்படும்.

சுவாமிநாதன் பவுண்டரி எஞ்சினிரிங் ஒர்க்ஸ், 7, வால்டாக்ஸ் ரோட், P. T., மதராஸ்.

த்யாகராஜ கீர்த்தனம்

[காபிரைட்]

(சங்கீத வித்வான் துறையூர் எம். ராஜகோபால சர்மா)

I

பல்லவி

ராம! ராம! க்ருஷ்ண! யனரே
ராத்ரி பகலு மாஸீதா

சரணம்

1. இதர மார்க்க ஸௌக்யமுலகு அதனி ஹ்ருதயமே ஸாக்ஷியு
2. கானி பனுல கோரி கோரி கரகு சுண்டு மானவுலு
3. குத்ஸிதபு மாடலகு குத்துக பொரலெடு ஜனுலு
4. ஸர்வ சாஸ்த்ர மன்னி ஜதிவி ஆசதாஸுலைன வாரு
5. எதுடி பச்ச ஜூடலேக ஹிதவு மாடலாடு ஜனுலு
6. சல்லனி வாக்குலு பல்கி ஸ்வாந்த மனலமைன வாரு
7. பலுக தேர்ச்சி யடுகபோதே தெலிவிகி ஹானியைன வாரு
8. ஜாதி ஹீனுலைனவாரு ஜாணலைனரதே ஸாக்ஷி
9. பாமு பந்தி கஜ பிசாச பாதகாக்ரேஸருலே ஸாக்ஷி
10. த்யாக ராஜு தெலுஸு கொன்ன தாரக மிஹபர ஸாதனமு

II

ராத்ரிபகலு	—இரவு பகல் எந்நேரத்திலும்
மா சீதா ராமகிருஷ்ண	—மானிடர்கள் தங்கள் ஜன்மத்தை புனிதமாக்கிக் கொள்ள ராமகிருஷ்ணா என்று
யனரே	—பகவந் நாமாவளிகளை சொல்வதில்லை.
இதர மார்க்க	—பயனற்ற மற்ற வழிகள்
ஸௌக்யமுலகு	—இன்பமாக தோன்றுவதற்கு
அதனி ஹ்ருதயமே	—அந்த ஜனங்களின் மனதுதான்
ஸாக்ஷியு	—காரணமாகும்.
கானிபனுல	—ஆகாத காரியங்களை
கோரிகோரி	—விரும்பி விரும்பி
மானவுலு	—மானிடர்கள்
கரகுசுண்டு	—சிரமமடைந்துகொண்டு
ராம க்ருஷ்ண யனரே	—பகவந் நாமாவை ஒருபோதும் சொல்லார்
குத்ஸிதபு மாடலகு	—வெறுக்கத்தக்க விஷயங்களைப் பேசி வீண் காலம் கழிப்பதற்கு
குத்துக பொரலெடு	—அதிக ஆர்வம் கொண்டு திரியும்
ஜனுலு	—ஜனங்கள்
ராம க்ருஷ்ண யனரே	—பகவந்நாமாவை ஒருபோதும் சொல்லார்
ஸர்வ சாஸ்த்ரமு	—சகல சாஸ்திரங்களையும்
அன்னி	—இன்னும் மற்ற கல்விகளையும்
ஜதிவி	—நன்கு கற்றுணர்ந்து
ஆசதாஸுலுஜனவாரு	—ஆசை என்னும் பிசாசின் வயப்பட்டுள்ள மானிடர்கள்
ராம க்ருஷ்ண யனரே	—பகவந்நாமாவை ஒருபோதும் சொல்லார்கள்
எதுடிபச்ச	—பிறர் வாழ்வை
ஜூடலேக	—காண சகிக்காதவர்களாய் இருந்துகொண்டு
ஹிதவு மாடலாடு	—நல்லவர்கள்போல் பேசி வரும்
ஜனுலு	—மானிடர்கள்
ராம க்ருஷ்ண யனரே	—பகவந்நாமாவை ஒருபோதும் சொல்லார்
சல்லனி வாக்குலு பல்கி	—பிறருடன் அன்பொழுகப் பேசி
ஸ்வாந்தது அனலமு ஜனவாரு	—உள்ளத்தில் கொடிய தீயைபோன்ற ஸ்வபாவம் கொண்டவர்கள்
ராம க்ருஷ்ண யனரே	—பகவந்நாமாவை ஒருபோதும் சொல்லார்
பலுக நேர்ச்சி	—ஸகல கல்வி கேள்விகளிலும் தேர்ச்சியடைந்து அவைகளில் நன்றாக பேசக்கற்றுக்கொண்டு விளங்குபவர்களை
அடுக போதே	—ஏதாவது ஒன்றைப்பற்றி கேட்டுவிட்டால்
தெலிவிகி ஹானிய்யனவாரு	—புத்தி ஹீனர்களாக பதில் சொல்லத் தெரியாமல் விழிப்பார்கள் அப்படிப்பட்டவர்கள்
ராம க்ருஷ்ண யனரே	—பகவந்நாமாவை ஒருபோதும் சொல்லார்
ஜாதிஹீனுலு ஜனவாரு	—உத்தம குலத்தில் பிறந்தும் தங்கள் கர்மாநுஷ்டானங்களை விடுத்து செய்யத்தகாதவைகளை செய்து வரும் மானிடர்கள்
ஜாணலு ஐன்ரு	—மிகுந்த துஷ்டர்களாக விளங்குகிறார்கள்
பாமு	—பாம்பு
பந்தி	—பன்றி
கஜ	—யானை
பிசாச	—பைசாசங்கள் முதலானவைகளின் குணங்கள் போன்று

இருமல், சுவாச காசம் தொண்டை கரகரப்பிற்கு நேரடியான சுவாச நிவாரணி

தொண்டை, சுவாசப்பை, மார்பு வியாதிகளுக்குப் பெப்ஸ் சிறந்த நிவாரணி. பாட்டில் ரூ. 1 வீதம் எங்கும் விற்கப்படுகின்றது. பெப்ஸ் உட்கொள்க.

PEPS

கிருமிநாச சுவாச மாத்திரைகள்.

உங்களுக்கு
மலச்சிக்கலோ அல்லது
ரத்தக்கொதிப்போ அல்லது
மண்டை கனமோ அல்லது
தலைவலியோ அல்லது
மயக்கமோ அல்லது
வாய்துர்நாற்றமோ அல்லது
சருமப்படுவ்னோ இருந்தாலும்
உடனே பரீக்ஷியுங்கள்.

காஸ்டபீன்

ருசி மிகுந்த சாக்லட் மலவிரோசனி. மலச்சிக்கலை ஒழிக்க பத்திரமும் நிச்சயமுமான வழி.

குழந்தைகள், நடுவயதினருக்கும், ஆரோக்யம், பலத்தை அளித்திருக்கின்றது.

எல்லா மருந்து வியாபாரிகளிடமும் 2 சாக்லட் உள்ள பாகெட் ஒரு அணு. ஒவ்வொன்றும் 25, 50, 100 கொண்ட பாட்டில்களிலும் கிடைக்கும்.

CASTOPHENE

CASTOR OIL CHOCOLATES

ஏஜண்டுகள் :—
மெஸர்ஸ்:
சிவராம் & ஸ்வாமி லிமிடெட்.
154, தைனியப்ப நாயக்கன் தெரு, பி. டி., மதராஸ்.

அட்டைப் படம்

பிரபல சினிமா நடிகை பாலட் காடார்ட்

பாதகாக்ரே ஸருலு	—கொடிய பாபங்களைச் செய்வதில் முதன்மையாக விளங்குகிறார்கள்.
அதே சாக்ஷியு	—அந்த துஷ்டர்கள் பகவத் கிருபையை அடைய இயலாது போனதற்கு இதுவே கரணமாம்.
த்யாகராஜு	—தியாகராஜன் என்று பெயர் கொண்ட நான்
தெலுஸுகொன்ன	—அறிந்து கொண்ட
தாரகமு	—தாரக மந்திரமானது
இஹ பரஸாதனமு	—தர்ம, அர்த்த, காம,மோக்ஷமென்ற ஸகல ஸௌக்கியங்களையும் அளிக்கவல்லது.

III

இது திவ்ய நாமப் பகுதியைச் சேர்ந்த கீர்த்தனங்களில் ஒன்றாகும். இக் கீர்த்தனத்தால் ஸ்வாமிகள் பக்திஹீனர்களான பாமர ஜனங்களின் தப்பான குண விசேஷங்களை அவர்களுக்கு எடுத்துக்காட்டி, அவர்களை நல்வழி திரும்பி ராமகிருஷ்ண வென்று பகவன் நாமாவளியைச் சொல்லி உய்யுமாறு கேட்டுக்கொள்ளுகிறார்.

ராமகிருஷ்ணயனரே:—"ஈமேனு கல்கி" என்ற கீர்த்தனத்தில் ஸ்வாமிகள் பகவந் நாமஸ்மரணம் செய்யவேண்டிய அவசியத்தை மானிடர்களுக்கு உதாரணங்களுடன் உபதேசித்துள்ளார். இங்கு, பகவன் நாம பஜனம் செய்யாது வீண் பொழுது போக்கித் தங்களைக் கடைத்தேற வண்ணம் செய்து கொள்ளும் மானிடர்களைக் குறித்து வருத்தங்கொண்டு இவ்விதம் தெரிவித்துள்ளார்.

இதரமார்க:—"ஸாரமே கானி" என்ற கீர்த்தனத்தில் ஸ்வாமிகள் கிடைத்தற்கரிய மானிட ஜன்மத்தை அடைந்து மனதைக் கண்ட கண்ட வழிகளிலெல்லாம் அலைந்து திரியவிடாமல் அடக்கி ராமா கிருஷ்ண வென்று பகவன் நாமஸ் மரணம் செய்யுமாறு உபதேசிக்கிறார். இங்கே ஸ்வாமிகள் அவ்விதமுள்ள மானிடர்கள்பால் வருத்தங்கொண்டு இவ்விதம் தெரிவித்துள்ளார்.

கானிபனுல:—ஆகாத காரியங்களுக்காக வீண்சிரமப்பட்டு கண்ட மனிதர்களிடம் போய் பல்லைக்காட்டி கெஞ்சிக் கூத்தாடி வீண்பொழுது போக்கும் நேரத்தில் பகவன் நாம ஸ்மரணம் செய்யக்கூடாதா என்று பாமர ஜனங்கள்பால் இரக்கங்கொள்கிறார். இதுபோன்றே அருட்பிரகாச வள்ளல் தெரிவித்துள்ள,

உறைந்து வஞ்சர்பால் குறையிரந் தவமே யுழல்கின்றயினி யுரைக்கு மிப்பொழுதுங்
குறைந்து போகின்ற தெழுதி யென் னெஞ்சே குலவுமொற்றியங்கோ நகர்க்கேகி
நிறைந்த சண்முக குரு நமசிவ[வோ]மி மலசிற் பரவரகரவெனவே
யறைந்து போற்றுது மையுறலென் மேலாணை காண வரருள் பெறலாமே

என்ற அருட்பா கவனிக்கத்தக்கது.

குத்ஸிதபு மாடலகு:—"நாராயண ஹரி" என்ற கீர்த்தனத்தின் 6-வது சரணத்தில் இது போன்றே தெரிவித்துள்ளார்.

எதுடி பச்ச:—"ப்ரொத்து போயெனு" என்ற கீர்த்தனத்தின் 2-வது சரணத்தில் பாமர ஜனங்களின் இவ்விதத் தன்மையைக் குறிப்பிட்டு ஹிதோபதேசம் செய்துள்ளார்.

சல்லனி வாக்குலு:—"எந்துகோ பாக தெலியலு" என்ற கீர்த்தனத்தின் 3-வது சரணத்திலும் ஸ்வாமிகள் இது போன்றே தெரிவித்துள்ளார்.

ஜாதி ஹீனுலனவாரு!—உத்தம குலத்திற்பிறந்தும் கர்மானுஷ்டானங்களை விடுத்து செய்யத் தகாத காரியங்களைச் செய்து உலக வாழ்வு சதம் என்று நம்பித்திரிபவர்களை இந்தச் சரணத்தால் குறிப்பிட்டு அவர்களுக்கு நல்லுபதேசம் செய்கிறார்.

பாமு பந்தி:—பாம்பின் விஷம்போன்ற கொடிய சித்தத்தையும், பன்றி போன்று மூர்க்க குணத்தையும் மதம் பிடித்தயானைபோன்று சகலரையும் துன்புறுத்தும் தன்மையையும் பைசாசம் போன்று எளிய ஜனங்களைப் பிடித்தாட்டிவதைப்பதையும் கொண்டுள்ள துஷ்டர்களின் சுவபாவத்தைக்கண்டு ஸ்வாமிகள் வருத்தங்கொள்கிறார்.

IV

ராகம் கௌளிபந்து தாளம் ஆதி

(15-வது மேள ஜன்யம்: ஆ. ஸரிமபநிஸ். ஸநிதபதபமகரிஸ.)

பல்லவி

; ஸ ரி மா ;	பா ; பா ;	; பம	ப த ப ம	கா ரீ	ப ம க ரி
ரா . ம	க் ரு ஷ் ண	ய .	. . ன .	ரே .	. . . .
ஸநி ஸரி மா ;	பா ; பா	; பநி	ஸ் ரி ஸ் நி	த ப ப த	ப ம க ரி
. ரா . ம	க் ரு ஷ் ண	ய	ன .	ரே . . .	. . . .
ஸநி ஸா ; ரீ	ஸநிதப நீஸா	; ரிம	ப நி ஸ் ரி	ஸ் நி த ப	ப த ப ம
. . ரா த்ரி	ப . க . லு .	மா .	. . ளீ .	. . . .	தா . . .

கரி

(ராம க்ருஷ்ண)

சரணம்

; ரீ மா பா	நீ ; ஸ்ா ;	; ஸ் நிக்	ரி ஸ் ா	ஸ் நி த ப	நீ ஸ் ா
இ த ர	ம ா ர் க	செ ள	க் ய	மு . ல .	கு
; பநிஸ்ரி ஸ்ாஸ்	நிதாபத பம	; ரி ம ப	நி ஸ் ரி	ஸ் நி த ப	ப த ப ம
அ . த . னிஹ்ரு	. த ய . மே .	ஸா . .	. க்ஷி .	. . . .	யு . . .

கரி

(ராம க்ருஷ்ண)

(மற்ற சரணங்களையும் இது போன்றே பாடவும்.)

(ஸங்கீத வித்வான் உமையாள்புரம் எஸ். வெங்கடராமையர் இந்தக் கீர்த்தனத்தின் வர்ணமெட்டை உதவினர்.)

ஜுரத்தில்

உஷ்ணம் 102 டிக்ரிக்கு மேலே போனால், கூந்தல் உதிர்வது நிச்சயம். அம்மையானாலும் சரி, 'டைபாயிட்' 'மலேரியா' 'இன்புளுயன்ஸா' முதலிய விஷ ஜுரங்களானாலும்சரி, சூடு காரணமாகவே மயிர் அபரிமிதமாகக் கொட்டுகிறது. ஜுர ஸமயங்களில் உஷ்ணம்அதிகமாக ஏறுவிடினும், மயிர் உதிர்வதுமட்டும் தவறுவதேயில்லை. அப்படி உதிரும்போது தக்க சிகிச்சைசெய்து தடுக்காமலிருந்துவிட்டால், மயிர் விடாமல் உதிர்ந்து தலையும் வழுக்கையாய்விடும்.

வெள்ளம் வந்தபிறகு அணையிடுவதேன்? மயிர் உதிர ஆரம்பிக்கு முன்னரே, கூந்தலைக் காப்பாற்றிக்கொள்ளுங்கள் ஜுரத்துக்குப் பிறகு கேசம் அரைப்பங்கு கால் பங்காகிக் குறைத்துவிட்டால், கேசவர்த்தினியைக் கொண்டு கேசத்தை விருத்திசெய்து பூரணமாக்கிக் கொள்ளுங்கள். கடைசியாக எல்லாப்பரீக்ஷைகளும் செய்தானபிறகு கேசவர்த்தினியே கூந்தலுக்குச்சிறந்தது என்று தெரிய வந்தால், கேசவர்த்தினியைமுதலிலேயே கைக்கொள்ளலாமே?

கேசவர்த்தினி

கூந்தலைகாப்பது, விருத்தி செய்வது, அழகுபடுத்துவது. விலை அணா 12. மேற்செலவு வேறு. எல்லாக் கடைகளிலும் கிடைக்கும்.

தயாரிப்பவர்:

தென் இந்திய ரஸாயன சாலை,
ஆர். எஸ். புரம் — கோயமுத்தூர்.

குறைந்த விலையில் கொசு வலைகள்

எமது வலைகள் அழுத்தமானவை. நான்கு முனைகள் நன்கு தைக்கப்பட்டவை. எல்லா வர்ணமும் கிடைக்கும்.

நீளம்	அகலம்	உயரம்	சாதா ரூ.	உயர் ரூ.	சிறந் ரூ.
6அடி	3½அடி	3½அடி	2-0	2-4	3-10
6 ,,	4 ,,	4 ,,	2-4	2-8	4-2
6½ ,,	4½ ,,	4½ ,,	2-8	3-0	5-2
7 ,,	5 ,,	5 ,,	3-0	3-8	6-0
7½ ,,	6 ,,	6 ,,	3-8	4-0	7-2

மூன்று சேர்ந்தாற்போல் வாங்கினால் 6 அடி X 4 அடி X 4 அடி வலை ஒன்று இனும். ஒவ்வொரு இனத்திற்கும் தபால் சார்ஜ் பிரத்யேகம். ஆங்கிலத்தில் எழுதவும்.

CALCUTTA CLOCK CO., (H 64)
15/1, Jay Mitter St.,
P. O. Hatkhola. Calcutta.

சித்திரமும் சிருங்காரமும்

நான்கு சிறகுகள் — ஒரு கோழை வீரனாக மாறியது — தேச பக்தியுடன் போராடிய சரிதை.

'நான்கு சிறகுகள்'

அலெக்ஸாண்டர் கோர்டா தயாரித்த 'நான்கு சிறகுகள்' என்ற இயற்கை வர்ணப் படம் மிகவும் ஸ்வாரஸ்யமானது. ரால்ப் ரிச்சர்ட்ஸன், ஜான்ஜமன் டுமெண்ட்ஸ், ஆப்ரே ஸ்மித், க்ளப்ரே முதலியோர் இதில் சிறப்புற நடிக்கின்றனர்.

கார்டூம் வீழ்ச்சிக்குப் பின் பத்து வருஷங்கள் கழிந்து விட்டன: ஜனரல் கார்டன் இறந்து பல ஆண்டுகள் மறைந்து ஆயின. ஒரு நாள் ராயல் நார்த் ஸர்ரே படை கிச்சனருக்கு உதவி புரிய ஸூடானுக்கு அனுப்ப உத்திரவாகிறது. வில்லபி, பர்ரோஸ், டரான்ஸ் முதலியவர்களுக்கு இதில் மிகுந்த திருப்தி: அவர்களது தோழன் ஹாரி பேவர்ஷாம் மட்டும் அவ்வளவு உத்சாகமாயில்லை: சில நாட்களுக்கப்புறம் பெரிய விருந்தொன்றில் ஜனரல் பர்ரோஸ் தன் புத்ரி எத்னே, ஹாரியை மணக்கப்போவதாக அறிவித்தார்.

படை எகிப்துக்குப் புறப்படும் தருவாயில் ஹாரி படையிலிருந்து ராஜிநாமா செய்து விடுகிறான். மற்ற மூவர் இது அவனது கோழைத்தனத்தைக் காட்டுவதாகக் கருதி, அவனுக்கு மூன்று வெள்ளைச் சிறகுகளைத் தங்களது பெயர்களுடன் அனுப்புகின்றனர். எத்னேயிடம் போய் நிலைமையைத் தெளிவுபடுத்த ஹாரி விரும்பியபோது அவளுக்கும் அது புரிபடவில்லை. ஆகவே அவளது விசிறியிலிருந்து மற்றொரு வெள்ளைச் சிறகைப் பிய்த்தெடுத்துக் கொள்கிறான் ஹாரி: மொத்தம் நான்கு சிறகுகள் கிடைக்கின்றன இவ்விதம்.

சிறிது காலத்திற்கப்புறம் ஸெயிண்ட் ஜேம்ஸ் பார்க்கில் ஹாரி படையொன்றின் அணிவகுப்பைக் கவனித்து வருவதை அவனது குடும்ப சிநேகிதரான டாக்டர் ஸட்டன் பார்க்கிறார்: அவரிடம்தான் கோழை என்பதையும், உடனே தான் எகிப்துக்குப் புறப்பட்டுப் போய், சிறகுகளைத் திருப்பிக் கொடுத்து சுயகௌரவத்தைக்காப்பாற்றிக் கொள்ளப் போவதாகக் கூறுகிறான். ஸூவாகும் எனுமிடத்தில் ஒரு கிரேக்க டாக்டரை அண்டி தன்னை பிரிட்டிஷ் வசம் கொண்டு போய்ச் சேர்க்கும்படி அவன் வேண்டுகிறான். அவன் ஸெங்காலி ஜாதியார் வேஷம் போட்டுக்கொண்டு ஊமை போல் நடித்தால் தான் அது சாத்தியம் என்று அவர் கூற, அவனும் அதற்கு இணங்க, அவன் நைல் நதி மார்க்கமாக வெளியேற்றப்படுகிறான்.

இதற்கிடையில் மாஹடியைப் பிடிப்பதற்கு கிச்சனர் செய்த ஏற்பாட்டை நிறைவேற்றி வைக்க ரான்ஸ், வில்லபீ, பரோஸ் ஆகிய மூவரும் அனுப்பப்படுகின்றனர். இந்தக் காரியார்த்தமாக இம்மூவரும் ஒரு மலைப்பிர தேசமாய் போய்க் கொண்டிருக்கும்போது ரான்ஸ் சூர்ய வெப்பத்தால் தாக்கப்பட்டு, நேத்ர த்ருஷ்டியைப் பறிகொடுக்க நேருகிறது. இந்த ஸ்திதியில் திடீரென்று எதிரிகள் பிரிட்டிஷ் படையை வந்து தாக்குகின்றனர். அநேகம் யுத்த வீரர்கள் கொல்லப்பட்டனர். மாறுவேஷம் பூண்ட ஹாரி குருடான ரான்ஸைக் காப்பாற்றுகிறான். மற்ற இருவரும் கைதிகளாகின்றனர்.

இந்தத் தாக்குதல் தீர்ந்து, சற்று அமைதி ஏற்பட்டதும் ரான்ஸை பக்கத்திலிருந்த பிரிட்டிஷ் ஸ்தலத்திற்கு சௌக்யமாய் அனுப்ப ஹாரி ஏற்பாடு செய்கிறான். பிறகு ரான்ஸ் இங்கிலாந்துக்கு அனுப்பப்பட்டு, பரோஸ் குடும்பத்தாரின் க்ருஹத்தில் சொஸ்தமடைந்து விடுகிறான். அவனிடம் எத்னேக்கு பரிதாபம் உண்டாகிறது. தான் அவனை மணக்க விரும்புவதாகவும் அவள் தன் பிதாவிடம் தெரிவிக்கிறாள்.

பிறகு ஹாரி ஓம்டர்மானுக்குப் போகிறான். அங்கு தான் மற்ற இருவரும் சிறைவாய்பட்டிருந்தனர். கைதிகள் நீராடும் நதியில் இருவரும் தங்களது விலங்குகளைச் சிறையில் வைத்துவிட்டு வரும்படி அவர்களுக்கு ஒரு ரகசியச் சீட்டு அனுப்புகிறான். நதிப்பக்கத்திலிருந்து ஹாரி திரும்புகையில் எதிரிப்படையினர் அவன் ஒரு வேஷக்காரன் என சந்தேகிக்கின்றனர். அவனை மாஹடி முன்பு அழைத்துக் கொண்டுபோக அவன் சிறையில் அடைக்கப்படுகிறான். கசையடி காரணமாக அவன் பிரக்ஞையற்று கிடக்கிறான் சிற்றைக்கூடத்தில். அப்போது பரோஸும் வில்லபியும் அவன் யார் என்று கண்டு கொள்கின்றனர்: பிரக்ஞை வந்ததும் ஹாரி கைதிகளின் விலங்குகளை கழற்றிக் குவிக்கிறான். இந்த சமயத்தில் பிரிட்டிஷ் கடற்படை ஓம்டர்மானை நோக்கி வந்து கொண்டிருந்தது.

பிரிட்டிஷ் படை வருகையை அறிந்ததும் மாஹடி கைதிகளைக் கொன்று விடும்படி உத்திரவிடுகிறான். மாஹடியின் வீரர்கள் இதற்காக சிறைக்கு வந்தபோது அவர்கள் பலமாகக் கைதிகளால் தாக்கப்படுகின்றனர், பெரிய சண்டை நடக்கிறது, மஹடியின் ஆட்கள் அநேகர் உயிர் இழக்கின்றனர். பிறகு பிரிட்டிஷ்காரர்கள் ஹாரியின் தலைமையின் கீழ் வெடி குண்டு இருக்கும் இடத்திற்குப் போய் மாஹடிக்கு எதிராக பந்தோபஸ்து செய்துகொள்கின்றனர்.

ஓம்டர்மான் யுத்தம் மும்முரமாக நடக்கிறது. மாஹடியின் எதிர்ப்பு பலிக்கவில்லை. சண்டை முடிவடையும் தருணம். கிச்சனர் படை மாஹடியைத் துரத்தியடிக்கிறது. எதிரிகள் நிர்மூலமாகின்றனர். பிரிட்டிஷ் படையினர் வெற்றி சம்பாதிக்கின்றனர்.

லண்டனில் இருக்கும் ஜான் டரான்ஸுக்கு பிரதி தினமும் டாக்டர் ஸட்டன் செய்திகளைப் பத்திரிகையிலிருந்து படிப்பது வழக்கம். வெற்றியைப்பற்றிய இந்தச்செய்தியும் அவனுக்குப் படித்துக்காட்டப்படுகிறது. ஹாரியின் தீரமும் பெருமையும் பத்திரிகை மூலமாக வெளி வந்ததைக்கேட்டதும் டரான்ஸ், தான் அவனைப்பற்றி தப்பபிப்பிராயம் கொண்டிருந்ததற்கு வருந்துகிறான்: உடனே ஹாரி விரும்பிய எத்னேயை, தான் மணப்பது தகாது என்றுணர்ந்து, ஹாரியே அவளை மணப்பதற்கு ஏற்பாடு செய்கிறான்.

இந்தப் படம் இவ்வாரம் எலபின்ஸ்டனில் காட்டப்படும்.

நடன ஜோடி.

ரீடா ஹேவர்த் ப்ரெட் ஆஸ்ட்டர் ஆகிய இருவரும் உயர் தரமாக நடிப்பதில் பிரக்யாதி மிகுந்தவர்கள். இவர்கள் இருவரும் சில அபூர்வ நடனக் காட்சிகளை "யூ வில் நெவர் கெட் ரிச்" நீ என்றும் பணக்காரனாக முடியாது, என்ற கொலம்பியா படத்தில் காட்டுகின்றனர். இம் மாத முடிவில் இந்தப் படம் நகரில் காட்டப்படும்.

வீரனுக்கு வாய்த்த வனிதை

"நான்கு சிறகுகள்" என்ற படத்தில் மிகச் சிறப்பாக நடிக்கும் ஜூன் டுப்ரேயும் ஜான் க்ளமண்ட்ஸும்.

இஸ்லாமிய நூல்கள்

மஹான் முகம்மது நபி	0	8	0
அபுபக்கர் ஸித்திக்	0	12	0
உமரெ பாரூக்	1	0	0

முஸ்லீம் வாசகம் 1-5 வகுப்புவரை கிடைக்கும்.

ஷாஜஹான் புக் டெப்போ,
நாச்சியார் கோவில்.

வீதிகளிலும் நம்பிக்கையற்ற கடைகளிலும் வாங்காதீர்கள்

நஞ்சன்கூடு பல்பொடி

I. D. L. G. மெடிகேட்
பல வியாதிகளைத்தடுக்கவும் . குணப்படுத்தவும்
சுகம்.உற்சாகம் ஊட்ட ஜீரக் அஜீர்ண.பித்த சமனி
உஷ்ண சமனி கூலாயில் ஸ்நான தைலம்

கூ.வ னிக்க போலிகளால் பற்களுக்கே அபாயம்

சோல் ஏஜண்ட்ஸ்: யுனைடெட் கன்ஸர்ன், 54, பந்தர் தெரு; மதராஸ்
(உதவி வைத்தியர் Dr. P. S. C. மணி) (தபால் மூலம் சிகிச்சை பெறுக)

நவ நாகரீகம்

★

நாசூக்கு

★

காசினி எழுதியது

* * * 'சிலருக்கு என்ன தான் நேர்த்தியாக யோசித்து அலங்காரம் செய்தாலும், அந்த நாசூக்குத் தோற்றம் ஏற்படமாட்டேன் என்கிறதே! இதுக்கு என்ன செய்யலாம்?' என்று மாலினி கேட்டாள்.

'மற்றும் சிலருக்கு ஒரு சாதாரணத் துணிப் புடவை கட்டி மிகவும் சொற்பச் சிங்காரம் செய்து கொண்டால் கூட அந்த நாசூக்கான தோற்றம் ஏற்பட்டு விடுகிறது. இதெல்லாம் அவா, அவா சுபாவத்தைப் பொருத்தது. என்ன அலங்காரம் செய்தால் என்ன? 'கிராடு' 'கிராடு'தான்! என்று நளினா தேவி தீர்மானமாகச் சொன்னாள்.

'அது என்ன கிராடு? கர்நாடகம் கிராமியம் என்றெல்லாம் கேள்விப்பட்டிருக்கிறேன்! இது புது பாஷையா? என்று கமலினி கேட்டாள்.'

'அது என்ன பாஷையோ, எனக்கே தெரியாது! ஆனால், கிராமியம் அநாகரீகம் என்றெல்லாம் இதற்கு அர்த்தமில்லை; நாட்டுப்புறத்தான் என்ற அர்த்தத்தை இது அழுத்தமாகக் குறிக்கும். எங்காத்து பரிபாஷை!' என்று நளினா தேவி கிராடு என்ற வார்த்தைக்கு வியாக்கியானம் செய்தாள்,

'ஆனல் நாசூக்கு, சுபாவத்தில் ஏற்பட்டால்தான் உண்டா? செயற்கையில் வராதோ? என்று மாலினி தான் கேட்டதை மறுபடியும் கேட்டாள்.

பயிற்சியில் வரும். இதனல்தான் நாசூக்காக உடுக்க, அலங்காரித்துக் கொள்ள மட்டும் தெரிந்தால் போராது; அது அப்படி நேர்த்தியாகத் தோன்றும்படி நடந்து கொள்ளவும் தெரிய வேண்டும் என்று சொல்லுவது சகஜம். சிலருக்கு, நளினாதேவி சொன்ன மாதிரியில் இது இயற்கையிலேயே ஏற்பட்டு விடுகிறது! இவர்கள் உண்மையிலேயே அதிருஷ்டசாலிகள்!' என்று நான் சொன்னேன்.

'பழகிக்கொள்வது என்ருல் என்ன செய்யணுமாம்? என்ருள் கமலினி.

'நமது பேச்சு, நடை, பாவனைகள் இவைகளைச் சீர்திருத்திக் கொள்ள வேண்டும்; மாலினி சொல்லும் கிராடுத், தன்மை இவைகளில் தான் ஏற்படும். நமது எந்தச் செயல் நாசூக்கின்மை குறைந்து இருக்கிறது என்பதை அறிந்து, திருத்திக் கொள்ள வேண்டும்!' என்றேன்.

"அப்படி என்ருல்?" என்ருள் நளினா தேவி.

'இப்போ மாலினி யாரைக் குறித்துச் சொன்னுள்? உங்களுக்கு அடையாளம் தெரிந்ததோ?' என்ருள் கமலினி.

'தெரிந்தது! தெரியாமல் என்ன?' என்றேன்.

'எங்களுக்குப் புரியலையே?' என்று கமலினியும்,நளினா தேவியும் ஏக காலத்தில் சொன்னுர்கள்.

'தன் நாத்தனர் பெண்ணைக் குறித்தே சொன்னுள் என்று நினைக்கிறேன். இந்தப் பெண்ணை நவ நாகரீக முறையில் சிங்காரித்து அழைத்து வந்திருந்தாள். அவளோ இது தனக்குப் பாந்தமாக இருப்பதாகக் காட்டிக்கொள்ளவில்லை!' என்றேன்,

'அப்படித்தானு?' என்று கமலினி கேட்க, மாலினி ஆம் என்று தலையை அசைத்தாள், 'சித்திரமும் கைப்பழக்கம் என்ற மாதிரியில் நாசூக்காக நடக்கப், பேச, சிரிக்கப் பழக்கிக் கொள்ளவும் தான் வேண்டும். நன்ருகச் சிங்காரித்துக் கொண்டால் மட்டும் போதாதே? இது பொருந்தும்படிப் பாந்தமாக நடந்துகொள்ள வேண்டாமா? மாலினி மருமகள் வாய் நிறைய வெற்றிலையைப் போட்டுச் சுவைத்துக் கொண்டிருந்தாள். இதில் ஒரு நாசூக்கு இல்லாததே மாலினியை இப்படிக் கேட்கச் சொல்லிற்று என்று எண்ணுகிறேன். பார் எப்படி ஒரு சிறிய செய்கை அந்த நாசூக்கான தோற்றத்தைக் கெடுத்து விடுகிறது! மேலும் அவளுக்கு அமரிக்கையும் அவ்வளவு போராது தான். இதெல்லாம் முதலில் நான் சொன்னபடி சிலருக்கு சுபாவத்தில் ஏற்பட்டு விடுகிறது.இல்லாவிட்டால் சிரமப்பட்டாவது பயிற்சி செய்து கொள்ளவேண்டும்; அந்த நாசூக்கான தோற்றம் உண்டாக வேண்டுமானுல் கொஞ்சம் சிரமத்தைப் பாராட்டாமல் பழகிக்கொள்ளவும் வேண்டியதுதான்.

* * * *

குளிர்ச்சிக்கு

இந்தக் காலத்தில்தான் பனைநொங்கு எங்கும் தாராளமாக அகப்படுமே. இதைக் குளிர்ச்சியான பதார்த்தம் என்று சாப்பிடுகிறதில்லையா? நொங்கை அப்படியே சாப்பிடாமல் ஒரு தினுசில் தயாரித்து உண்டால் உடம்புக்கு புஷ்டி, குளிர்ச்சி இரண்டும் உண்டாகுமாம். வெயில் தாங்காமல் இளைத்துப்போகும் குழந்தைகளுக்கு தினம் கொஞ்சம் கொடுத்தால் ரொம்பவும் நல்லதாம், தயாரிப்பதும் சிரமம் இல்லை.

கொஞ்சம் பாலில் சிறிதளவு தண்ணீர் கலந்து, வேண்டிய அளவு சர்க்கரையையும் சேர்த்துக் கொள்ள வேண்டுமாம். நொங்கை அதன் உள்ளே இருக்கும் நீர் சேதமாகாமல் சிறிய துண்டுகளாக்கி இந்தப் பாலில் போட வேண்டும், காலையில் பத்து மணி சுமாருக்கு இப்படிப் பாலில் ஊற வைக்கலாம், பிறகு மத்தியானம் வெயில் தாபம் அதிகமாக இருக்கும் போது, பன்னிரண்டு, அல்லது ஒரு மணிக்கு, இதை எடுத்துச் சாப்பிடவேண்டியது. நல்ல ருசியாக இருப்பதுடன், ரொம்பவும் குளிர்ச்சி கொடுக்குமாம். குழந்தைகளுக்கு உடம்பு புஷ்டிகூட உண்டாகுமாம்.

* * * *

பழ ரஸச் சாதம்

ஆழாக்கு அரிசியை குழைவு இல்லாமல் கொழித்து எடுத்துக் கொள்ளவேண்டும். கொஞ்சம் நெய்விட்டு, சற்றே புரட்டிக் கொண்டால் நல்ல வாசனையாக இருக்கும். ரொம்பவும் சிவக்க வருத்துவிடக் கூடாது, தித்திப்பான நார் மாம்பழச் சாரில் சுமாருக்கு அரைப்படி போல் பிழிந்து எடுத்து, இதில் அரிசியை வேக வைக்கவேண்டும். நார்ப பழம் அவசியம் இல்லை; ஆனுல்அதை ருசியான முறையில் செலவு செய்ய இது ஒருவழி என்று வைத்துக்கொள்ளேன்.

அரிசி வெந்ததும் இஷ்டம் போல் நல்ல திதிப்பாக இருக்குப்படியோ, மட்டாகவோ சர்க்கரை போட்டு, நெய்விட்டுச் சுருளக் கிளறி, இறக்கவேண்டும். ஏலப் பொடி தூவலாம்! ஜாதிக்காயைத் துருவிப்போடலாம். அப்படியே மாம்பழ வாசனை தூக்கி நிற்கும்படியும் விட்டு விடலாம். சாதம் கையில் ஒட்டாமல் சற்றே தாராளமாகவே நெய் போட வேண்டும். முந்திரிப் பருப்பு, திராக்ஷைப் பழம் இவைகளைப் பக்குவமாக வறுத்துப் போடலாம், நல்ல ருசியாக இருக்கும், மற்றைய விவரங்கள் அடுத்த கடிதத்தில்.

முஸ்லிம் கோரிக்கை

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒப்புக்கொள்ளப்பட்டால், பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திலேயே ஒரு கூட்டாளியாக இருக்க முஸ்லிம் இந்தியா தயார் என்பதை தான் அறிந்தேன்: கிரேட் பிரிட்டனுடன் பொருளாதாரப் பிரச்னைகளைப் பரிசீலிக்கவும் அது சித்தம்: சாம்ராஜ்யத்தின் இதர நாடுகளுடன் அது பயன்படும்படியான வழியில் சிநேக பாவத்துடன் நடந்து கொள்ளும். முஸ்லிம் இந்தியாவைப பற்றியமட்டில், இனி காலத்தைக் கடத்துவது தவறு. முஸ்லிம் இந்தியக் கோரிக்கையை அங்கீகரித்து, பூரண உரிமை கொண்ட முஸ்லிம் இந்தியாவை கிரேட் பிரிட்டன் நிலை நாட்டுமானுல், மத்ய ஆஸியாவின் கேந்திரஸ்தானத்தில் உண்மையாய் நடந்து கொள்ளக்கூடிய ஒரு வலுமிகுந்த கூட்டாளி பிரிட்டனுக்குக் கிடைக்கும்.

மத்ய ஸர்க்கார் அமைப்பு

மத்ய ஸர்க்காரில் முஸ்லிம்கள் அமைக்க விரும்பிய சமஷ்டி திட்டம் என்னவென்பது எனக்குத் தெளிவாகவில்லை. ராஜப்பிரதிநிதியைத் தலைவராகக் கொண்ட ஒரு நிரந்தர சாம்ராஜ்ய சபை ஸ்தாபிப்பதை அவர்கள் வரவேற்பதாக எனக்குப்பட்டது: வெளிநாட்டுக் கொள்கை, பாதுகாப்பு இலாகா, இவை இதன் ஆதீனத்தின் கீழ் வரும்: இதில் முஸ்லிம் இந்தியா, ஹிந்து இந்தியா, சுதேச சமஸ்தானங்கள் இவற்றின் பிரதிநிதிகள் ஸ்தானம் வஹிப்பார்கள். "எப்படி கனடாவில் ஒற்றுமை கொஞ்சம் கொஞ்சமாக ஏற்பட்டு நிலை பெற்றதோ, அதே மாதிரி இந்தியாவிலும் ஒற்றுமை வரக்கூடும்: இதைத்தான் அநேக முஸ்லிம்கள் சுட்டிக்காட்டுகின்றனர். பக்கத்தில் பலம் மிகுந்த அல்ஸ்டர் அனுபவத்தைக் கொண்ட கிரேட் பிரிட்டன், முஸ்லிம் நோக்கத்தை அறிய வேண்டும்" என்று என்னிடம் வற்புறுத்தப்பட்டது. — "ஸ்பெக்டேடர்."

விக்டோரியா டிபோ. மைலாப்பூர், மதராஸ்.

மூன்று அவசிய குடும்ப ஔஷதங்கள்.

இரண்டும் அணு 10. ஸ்ரீகர கஸ்தூரி கோரோஜனை மாத்திரை இரண்டும் அணு 10

பாலக்ஸ்—பேதியாக மாத்திரை, — பாட்டில் அணு 4.

யுனைடெட் கன்ஸர்ன், 54, பந்தாதெரு, மதராஸ் (மாடுங்கா)

சிறுவர் கதை

★

கர்வ பங்கம்

★

"ராஜன்"

தபோவனம் என்பது ஒரு பெரிய காடு. அக்காட்டில் அநேக ரிஷிகள் வசித்து வந்தனர். அவர்களில் பைரவர், உதங்கர் என்ற இரண்டு ரிஷிகள் யாழ் வாசிப்பதில் வல்லவர்கள். அவர்கள் போய் யாழ் வாசித்து கீர்த்தி பெருத தேசமே இல்லை. அவர்களுடைய புகழ் பூலோகமெங்கும் பரவியது. அவர்கள் தங்களைக் காட்டிலும் யாழ் வாசிப்பதில் வல்லவர் எவருமில்லை என்று கர்வம் கொண்டனர். அதனல் அவர்கள் யாரையும் மதிக்கவில்லை.

அவர்களுடைய புகழ் தேவ லோகத்திற்கும் எட்டியது. தேவேந்திரன் அவ்விரு ரிஷிகளையும் வரவழைத்து யாழின் கானத்தைக் கேட்டு பரமானந்தம் அடைந்தான். அவர்கள் அடிக்கடி தேவலோகம் சென்று யாழ் வாசித்துத் தேவர்களை மகிழ்வித்தனர். இதனல் இவர்கள் கர்வம் இன்னும் அதிகமாயிற்று.

வழக்கம்போல் அவர்கள், ஒரு நாள் தேவலோகத்தில் யாழ் வாசித்தனர். வாசித்ததும் எல்லா தேவர்களுடைய வயிறும் வீங்கிவிட்டது. உடனே தேவர்கள், அவர்களது வீணை கானத்தை நிறுத்தும்படி வேண்டினர். தங்களுடைய கானத்தினல் தேவர்களது வயிறு வீங்குவதைக்கண்ட ரிஷிகள் பயந்து, யாழ் வாசிப்பதை நிறுத்தினர். மானிடராலுமன்றி, தேவர்களாலும் கொண்டாடப்படும் தங்களுடைய கானத்திற்கு அவமதிப்பு ஏற்பட்டதைக் கண்டு அதன் காரணத்தை அறிய பிரம்மாவிடம் சென்று முறையிட்டனர்.

அது கேட்ட பிரம்மா, "முனி ஸ்ரேஷ்டரே! இதன் காரணம் எனக்கும் தெரியவில்லை. ஆதலால் நீங்கள் மகாவிஷ்ணுவிடம் போய்க் கேளுங்கள்" என்ருர். அவ்வாறே பைரவரும், உதங்கரும், மகாவிஷ்ணுவிடம் சென்று கேட்டனர். அதற்கு அவர், "ரிஷிகளே, இதன் காரணத்தைக் கூற என்னுல் முடியாது. ஆனல் பூலோகத்தில் தண்டகாரணியத்தில் தவம் செய்யும் ஒரு குரங்கினிடம் சென்று கேட்டால் தெரிய வரும்" என்று கூறினுர். ரிஷிகளும் உடனே தண்டகாரணியத்தை நோக்கிச் சென்றனர்.

தண்டகாரணியத்தில் அநேக தினங்கள் தேடி அலைந்தனர். கடைசியில் ஒரு மரத்தடியில் தவம் செய்துகொண்டிருந்த குரங்கொன்றைக் கண்டனர். இக்குரங்கு தான் ராம தாதனுகிய ஆஞ்சநேயர். ரிஷிகள் வெகு நேரம் காத்திருந்தும், தவம் செய்து கொண்டிருந்த ஆஞ்சநேயர் கண் திறக்கவில்லை. கடைசியில் அவர் விழித்து, இவர்களை நோக்கினுர். உடனே ரிஷிகளும் தாங்கள் வந்த காரணத்தை தெரிவித்தனர்.

தெரிவித்ததும் ஆஞ்சநேயர், பைரவர் கையிலிருந்த யாழை வாங்கி "ராமக்கிரியை" என்ற ராகத்தை வாசித்தார். உடனே எதிரில் இருந்த மலை உருகியது. உருகியதும் பைரவருடைய வீணையை அதில் வைத்தார். வைத்ததுதான் தாமதம் உடனே மலை முன்போல கல்லாய்விட்டது. அப்போது ஆஞ்சநேயர் ரிஷிகளை நோக்கி, "ரிஷிகளே! யாழின் கானத்தில் நீங்கள் வல்லவர்கள் அல்லவா? இப்போது உதங்கர் கையில் இருக்கும் மற்றொரு யாழை வாசித்து, இந்த மலையை உருக்கி, பைரவருடைய யாழை எடுத்துச் செல்லுங்கள்" என்ருர்.

பைரவரும், உதங்கரும் வெகு நேரம் அநேக ராகங்களை யாழில் வாசித்தனர். ஒன்றும் பலிக்கவில்லை. மலை இருந்தவாறே இருந்தது. கடைசியில் தங்களால் முடியாதது கண்டு, ஆஞ்சநேயரை வேண்டிக்கொண்டனர். அதற்கு அவர், "ரிஷிகளே! நீங்கள் யாழ் வாசிப்பதில் மிகவும் வல்லவர்கள் எனக் கர்வம் கொண்டீர்கள். 'வல்லவனுக்கு வல்லவன் வையகத்திலுண்டு,' என்று நினைத்து கர்வங் கொள்ளாமல் இருக்க வேண்டும். இதுவே நீங்கள் அறிய வேண்டிய விஷயம்" என்று கூறி 'மலைய மாருதம்' என்ற ராகத்தை யாழில் வாசித்து, மலையை உருக்கி, பைரவரது யாழை எடுத்துக் கொடுத்தார். பைரவரும், உதங்கரும் ஆஞ்சனேயரை நமஸ்கரித்துச் சென்றனர். அது முதல் ரிஷிகள் கர்வம் கொள்ளவே இல்லை.



சரும ஆரோக்யத்தினுல் மேனியின் அழகைக் காப்பாற்றுங்கள்.

அழகிய புதிய ரெக்ஸோனு ஸோப்,

எற்கனவே இந்தியா முழுவதும் பிரக்யாதியடைந்து வருகிறது. அது எனெனில் அது இருவித பலனை அளிக்கிறது. சருமத்தைச் செவ்வனே சுத்தம் செய்யும் பொழுதே தொத்து வியாதி எற்படாது பாதுகாத்து, அதிலுள்ள சிறந்த தைலத்தையும் ஊட்டுகிறது.

'காடில்'—ஓர் ஆச்சர்யமான புதிய சத்து ரேக்ஸோனுவில் உள்ளது.

சரும சுகத்தை அளித்துக் காப்பாற்றும் 'காடில்' என்றதோர் புதிய மருந்து சத்து சேர்ந்த ஸோப், இந்தியாவில் ரெக்ஸோனு ஒன்றேதான். அதன் நுரை நன்ருக சுத்தம் செய்வதுடன் தொத்து வியாதியின் அபாயத்தை நீக்கும். சருமத்துவாரத்தின் அடிவரை சென்று, மாசை அகற்றி சருமத்தை மிருதுவாக்கி, குணப்படுத்தும்.

குழந்தைகளுக்கேற்றது ரேக்ஸோனு. ரெக்ஸோனு உங்கள் குழந்தைகளின்

மிருதுவான சருமத்திற்கு அவசியம். அதன் உயர்தர மருந்து சத்து காப்பான், சொறி, சிரங்கு முதலிய சாதாரண வியாதிகளினின்றும் அவர்களை பாதுகாக்கும்.

Rexona

சோப்பும் பசையும் மேனியின் அழகை அதிகமாக்கிக் காப்பாற்றுகிறது.

ஸ்நமளிக்கும்— ரேக்ஸோனு பசை. சகல சரும வியாதிகளையும் ரெக்ஸோனு பசை நன்ருக ஆற்றி, சீக்கிரத்தில் சொஸ்தப்படுத்தும்

REXONA PROPRIETARY LIMITED. RP 18—169 TM